# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 10
செய்தி 5
ஜனவரி 2022
விலை ரூ 10/-





28.12.2021 அன்று சென்னை தெற்கு 2 கிளையில் கேங்மேன் கோரிக்கை மாநாடு நடைபெற்றபோது 2022 ஆம் ஆண்டின் சந்தா 500—ஐ மாநில பொதுச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது



கேங்மேன் பயிற்சி காலத்தை 3 மாதமாக குறைத்திட... சொந்த மாவட்டங்களில் பணியாற்ற உத்தரவிட... தேர்வான 4000 கேங்மேன்களை பணி நியமித்திட வலியுறுத்தி 28.12.2021 அன்று கோவை மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்




செங்கல்பட்டு மின் பகிர்மான வட்ட 16 வது ஆண்டு பேரவை




முறைகேடாக வழங்கப்பட்ட உத்தரவுகளை ரத்து செய்ய வலியுறுத்தி 30.12.2021 அன்று கடலூர் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்

# மின்கதிர்
## செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**

**ஜனவரி 2022**

**உள்ளே....**

★ புத்தாண்டை வரவேற்போம் புதுயுகம் படைப்போம்
★ ஜம்மு காஷ்மீர் மாநில மின்ஊழியர்கள் போராட்டத்திற்கு பணிந்தது ஒன்றிய அரசு
★ 2022 பிப்ரவரி 23,24ல் அகில இந்திய வேலை நிறுத்தம்.
★ வாழவைத்த தமிழக மின்வாரியத்தை வாழவைப்போம்.
★ கேங்மேன் தொழிலாளர்களின் கோரிக்கையும் போராட்டமும்
★ பொறியாளர் அமைப்பின் 6வது மாநில மாநாடு
★ ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் வெள்ளிவிழா மாநாடு
★ அனல் மின்நிலைய ஆட்குறைப்பு அறிவியல் பூர்வமற்ற அறிக்கை

**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.

# புத்தாண்டை வரவேற்போம்! புதுயுகம் படைப்போம்!

2020 மற்றும் 2021-ம் ஆண்டும் கொரானா தொற்று நோய் 1 மற்றும் 2-ம் அலை இதில் ஏற்பட்ட பாதிப்புகளும் சோகங்களும் நிறைந்த ஆண்டாக கடந்த இரு ஆண்டுகள் இருந்தது. புதிதாக பிறக்கும் 2022-ம் ஆண்டு அனைவரது வாழ்விலும் நம்பிக்கையும், வெளிச்சத்தையும் தருகின்ற ஆண்டாக இருக்க வேண்டுமென்பது அனைவரின் அவா!

ஆனால் ஒமைக்காரன் என்ற புதிய வைரஸ் பரவுவதாக அறிவிப்புகளும், அச்சமும் கடந்த ஆண்டின் இறுதியிலேயே உலக நாடுகளாலும், ஒன்றிய அரசாலும் , அறிவிப்புகள் வந்துள்ளன. மக்களும், உழைப்பாளிகளும் மீண்டும் அச்சத்தின் பிடியில்!

இவற்றை தடுக்க தடுப்பூசி செலுத்திக்கொண்டு, முககவசம் அணிவது தான் தீர்வு என அனைத்து தரப்பினரும் எச்சரிக்கை செய்து வருகின்றனர். இந்த சந்தடி சாக்கில் ஒன்றிய பிஜேபி அரசு அனைத்து மக்கள் விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த புத்தாண்டின் துவக்கத்தில் வேலைவாய்ப்பின்மை 10 சதவீதமாக உயர்ந்துள்ளது. நகர்புற வேலையின்மை 9.3 சதவீதத்தை எட்டியுள்ளதாக இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது. மொத்த விற்பனை விலைக்குறையீடு கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத 14.23 சதவீதம் என்ற நிலைக்கு கடந்த ஆண்டின் இறுதியில் எட்டியுள்ளது. பணவீக்கம் சுமை உயர்ந்து கொண்டே செல்கிறது. வேலையின்மை பற்றிய விவரங்களை ஒன்றிய அரசு முழுமையாக வெளியிடுவதில்லை.

ஒன்றிய அரசின் கவனம் எல்லாம் இந்திய கார்ப்பரேட் முதலாளிகளை மேலும், மேலும் செல்வந்தர்களாக மாற்றுவதற்காக தான். மருத்துவம், கல்வி, வேலை வாய்ப்பு இதில் கவனம் செலுத்தாத அரசாக ஒன்றிய பிஜேபி அரசு உள்ளது.

பொதுத்துறைகளை காவு கொடுப்பதற்கான நடவடிக்கைகளும், இயற்கை வளங்களை சூறையாடுவதற்கும் தனியாரின் வேட்கைக்கு உறுதியாக நிற்கின்ற அரசாக இருக்கின்றது. அதற்கு

ஆதரவாக மக்கள் விரோத தொழிலாளர் விரோத நடவடிக்கையும் எடுத்து வருகிறார்கள். ஒன்றிய அரசின் தவறான கொள்கையை மக்களிடமும், உழைப்பாளிகளிடமும் கொண்டு சென்று பிப்ரவரி 23 -24-ல் வேலை நிறுத்தத்தில் பங்கேற்போம்!

தமிழக மின்வாரியத்தில் பணியாளர்களுக்கு 01.12.2019-ம் ஆண்டு முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். ஆண்டுகள் இரண்டு கடந்த நிலையில் பேச்சுவார்த்தைக்குழு அமைத்தும் பேச்சுவார்த்தை துவங்கப்படவில்லை. போக்குவரத்து ஊழியர்களுக்கு இரண்டு முறை பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. மழை, வெயில், நோய் தொற்றுக்காலம் என அத்துணை இடையூறகளிலும் கடுமையாக பணியாற்றி தடையற்ற மின்சாரத்தை வழங்கிய மின் ஊழியர்களை வஞ்சிப்பது சரியல்ல என்பதை விடியல் அரசு உணர வேண்டும். முந்தைய ஆட்சியாளர்களால் பஞ்சப்படியும், சரண் விடுப்பும் இழந்துள்ளனர்.

மேலும் மின்வாரியத்தின் வருவாயில், பெரும்பகுதி அதிக விலை கொடுத்து மின்சாரத்தை கொள்முதல் செய்வதை கைவிட்டு மின்வாரியமே தன்னுடைய மின் உற்பத்தி நிலையங்களில் முழுவீச்சில் மின் உற்பத்தியை துவக்கிட வேண்டும். நீண்ட கால கொள்முதல் ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். சுற்றுச்சூழலை பாதுகாக்க சூரிய சக்தி (Solar) பூங்காக்களை அமைக்கப்பட வேண்டும், மரபுசாரா எரிசக்தியை நோக்கி பயணிக்க வேண்டும்.

மின்வாரியத்தின் இந்த ஆண்டின் துவக்கத்தில் 53,000 காலிப்பணி இடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வேலை பளுவை கூடுதலாக பணியாளர்கள் மீது சுமத்துவதை கைவிட வேண்டும். அவுட்சோர்சிங் முறைகளையும் ஒழித்திட வேண்டும். ஒப்பந்த ஊழியர்களை, பகுதி நேர பணியாளர்களை பணி நிரந்தரப்படுத்திட வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளோடு புத்தாண்டை வரவேற்போம்! புதுயுகம் படைப்போம்!

வல்லான் பொருள் குவிக்கும்
தனியுடைமை நீங்கி
வர வேண்டும் திருநாட்டில்
பொது உடைமை!



# புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்



# ஜம்மு காஷ்மீர் மாநில மின் ஊழியர்கள் போராட்டத்திற்கு பணிந்தது ஒன்றிய அரசு!

**- எஸ்.இராஜேந்திரன்**

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் மின்வாரியத்தை தனியார் மயப்படுத்துகின்ற நடவடிக்கையை எடுத்து வருகின்றது. ஜம்மு காஷ்மீர் பவர் டிரான்ஸ் மிஷன் கார்ப்பரேசன் லிமிடெட் ( JKPTCL) மற்றும் பவர் கிரிட் கார்ப்பரேசன் ஆப் இந்தியா இரண்டும் இணைந்து கூட்டு நிறுவனமாக உருவாக்குவதின் மூலம் மின்துறையின் வளர்ச்சி ஆரம்ப நாட்களில் இருந்தது.

ஜம்மு காஷ்மீர் மின்சார ஊழியர்கள், பொறியாளர்கள் அனைவரும் மின் அபிவிருத்தி துறையின் கீழ் செயல்பட்டு வந்தனர். இவர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாக உள்ளனர். இவர்களைத் தவிர ஆயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்களாகவும் பணியாற்றி வந்தனர். ஒன்றிய அரசு இவர்களை நிரந்தரப்படுத்த வாக்குறுதியும் அளித்திருந்தது. ஆனால் ஒரு கட்டத்தில் ஜம்மு காஷ்மீர் மாநிலம் யூனியன் பிரதேசமாக பிரிக்கப்பட்டது. ஊழியர்களுக்கான உறுதி மொழியை நிறைவேற்றவில்லை. சம்பளத்தை காலம் தாழ்த்தி வழங்கி வந்தது. அனைத்து அரசு ஊழியர்களும்( ஒப்பந்தம் மற்றும் நிரந்தரம்) பவர் கார்ப்பரேசனுக்கு பணி நிலையில் மாற்றம் செய்யாமல் தற்காலிக பணி இடம் மாற்றம் செய்யப்பட்டனர். இந்நிலையில் ஒன்றிய அரசின் மின்சாரத்துறை 33 கே.வி., நெட் ஒர்க்கை நாடு முழுவதும் பவர் கிரிட் கார்ப்பரேசனின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு தேசிய பணமாக்கல் திட்டத்தின் கீழ் முயற்சி செய்தது. ஆனால் ஜம்மு காஷ்மீர் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் பொறியாளர்கள் ஒன்றிய அரசின் இந்த மோசடி திட்டத்தை உணர்ந்து டிசம்பர் 17 நள்ளிரவு முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் இறங்கினார்கள். ஜம்மு காஷ்மீரில் மின்வாரிய ஊழியர்கள் மீது தாக்குதல் தொடுக்க ஒன்றியஅரசு தாயாரானது. அனைத்து தொழிற்சங்க தலைவர்கள் வீட்டில் போலீஸ் சோதனை நடத்தப்பட்டது. அனைத்து தொழில்நுட்ப பணிகளிலும் இராணுவத்தை ஈடுபடுத்தினார்கள். ஆனால் ராணுவத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. 95 சதவீதம் துணை மின் நிலையங்களும், மின்பாதைகளும் பாதிப்புக்குள்ளாகி மின்சாரம் இல்லாமல் பாதிப்பு ஏற்பட்டது.

இந்த சூழ்நிலையில் தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு இந்திய நாடுமுழுவதும் ஜம்மு காஷ்மீர் மாநில மின்சார ஊழியர்களுக்கு ஆதரவு குரல் எழுப்பஹவம் கண்டன முழுக்கங்களை பதிவு செய்யவும் கேட்டுக்கொண்டது. அதன் அடிப்படையில் 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் நாடு முழுவதும் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் பொறியாளர்கள் கண்டன ஆர்பாட்டத்தை நடத்தினார்கள். 20-ந்தேதி நள்ளிரவு தொழிற்சங்க தலைவர்களை அழைத்து ஒப்பந்தம் காணப்பட்டது. போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச மின்வாரியத்தில் பணியாற்றும் மின்ஊழியர்கள் மற்றும் பொறியாளர்கள் இணைந்து போராடி பணிய வைத்திருப்பது மின் ஊழியர்களின் போராட்ட

வரலாற்றில் ஒரு மைல் கல். 72 மணி நேரத்தில் இந்த சாதனையை படைத்துள்ளனர்.

இரணுவமே எதிர்கொண்டாலும் ஊழியர்களும், பொறியாளர்களும் இணைந்து என்ன விலை கொடுத்தாலும் உரிமையை காப்போம் என்று செயலாற்றிய ஜம்மு காஷ்மீர் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் பொறியாளர் களுக்கு தமிழக மின்வாரிய ஊழியர்களின் புரட்சிகர வாழ்த்துக்கள்.

தமிழகத்தில் இதே போன்று துணை மின் நிலையங்களை தனியாருக்கு 3 ஆண்டுகளுக்கு பராமரிக்க கொடுக்க முற்பட்ட பொழுது 2020 டிசம்பர் 21-ல் மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள் இணைந்து போராடி அந்த உத்தரவை திரும்ப பெற்றனர். தற்போது தமிழத்தில் புதியதாக பொறுப்பேற்ற திமுக அரசும் துணை மின் நிலையங்களையும், கணக்கீடு, உற்பத்தி மற்றும் விநியோக பிரிவுகளில் அவுட் சோர்சிங் விடுவதற்கான நடவடிக்கை எடுக்க உள்ளதாக தகவல்கள் வெளிவருகின்றன.

தமிழக அரசு போராட்டத்தை தூண்டாது என நம்புகிறோம். அரசும், மின்வாரியமும் தங்களது எண்ணங்களை மாற்றிக்கொள்ளாவிட்டால் போராடுவதை தவிர வேறு மார்க்கம் இல்லை.

# கேங்மேன் கோரிக்கை மாநாட்டில் சென்னை தெற்கு வட்டம் -2 நிதி உதவி

திரு. E. சிலம்பரசன் கேங்மேன், பள்ளிக்கரணை பிரிவு, சென்னை தெற்கு வட்டம் -2-ல் பணி புரிந்து வந்தார்.

கடந்த 13.10.2021 அன்று மாலை சுமார் 5மணியளவில் மின் விபத்து ஏற்பட்டு காமாட்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் இல்லாத காரணத்தால் 02.12.2021 அன்று அப்பல்லோ மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்களின் அறிவுரையின்படி அவசர ஆப்ரேசன் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

திரு. E. சிலம்பரசன் அவர்கள், சுய நினைவு இல்லாமல் இருந்தார். அவரது மனைவி மற்றும் 2வயது நிரம்பிய இரட்டை பெண் குழந்தைகள் மிகவும் சிரமத்திற்குள்ளானார்கள். பொருளாதார ரீதியாகவும் அவர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

மின்வாரிய உத்தரவின்படி, வாரியப்பணியின் போது விபத்து ஏற்பட்டால் மின்வாரியமே சிகிச்சைக்கான செலவை ஏற்கும் என தெளிவாக குறிப்பிட்டுள்ளது. ஆனால் புதிதாக உருவாக்கப்பட்ட கேங்மேன் பணியாளர்களுக்கு இந்த உத்திரவின் பலனை அனுபவிக்க பலமுறை கடிதம் கொடுத்தும் வாரிய நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை என்பது கவலையளிக்கிறது.

இதன் பின் மின்வாரியத்தலைவர் அவர்களிடம் மாநில மையம் தலையீடு செய்து மருத்துவ சிகிச்சைக்கான நிதி உதவியும் செய்யப்பட்டு தற்போது சிகிச்சைக்கு பின் வீடு திரும்பியுள்ளார். மேற்கண்ட தோழருடைய குடும்ப சூழ்நிலையைக்கருதி மாநாட்டில் அறைகூவல் விட்டபொழுது ரூ.10,000/- உடனயாக திரட்டப்பட்டு குடும்ப செலவிற்கு வழங்கப்பட்டுள்ளது. மத்திய அமைப்பின் மண்டலச்செயலாளர் தோழர் ஏ.முருகானந்தம், கிளைச்செயலாளர் தோழர் டி. அன்பழகன் மற்றும் தோழர் கௌதமன் ஆகியோர் சரியான நேரத்தில் தலையீடு செய்த காரணத்தினால் மருத்துவ உதவியும், நிதி உதவியும் தோழர் சிலம்பரசன் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டது.

தற்போது மருத்துவ காப்பீடு திட்டத்தில் கேங்மேன் பணியாளர்களை இணைத்துள்ளனர்.



# 2022-ல் பிப்ரவரி 23-24-ல்
# 21வது அகில இந்திய பொது வேலை நிறுத்தம்!

மத்திய அரசின் தொழிலாளர் விரோத மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்தும், பொதுத்துறைகளை பாதுகாக்கவும்,அனைத்து துறைகளில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரம் படுத்தவும், கேஷவல், கான்ட்ராக்ட், அவுட்சோர்சிங் முறைக்கு முடிவு கட்டவும், அனைவருக்கும் சமூக பாதுகாப்பான பென்சன் வழங்க வலியுறுத்தியும், முறைசாரா தொழிலாளர்களுக்கான நலவாரியங்களை சீர்குலைக்கும் நடவடிக்கையை கண்டித்தும், தேசிய பணமாக்கும் கொள்கை உள்ளிட்ட எந்த பெயராலும் பொதுத்துறைகளை தனியார் மயமாக்க கூடாது, விவசாயம், கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் பொது முதலீட்டை அதிகப்படுத்த வேண்டும் மின்சார சட்டதிருத்த மசோதாவை கைவிட வேண்டும் என்பன போன்ற முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து நாடு தழுவிய 21வது அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தை நடத்த மத்திய தொழிற்சங்கங்கள் திட்டமிட்டுள்ளன.

தமிழகத்தில் இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்க,தொழிற்சங்கங்கள் கூடி கீழ்க்கண்ட முடிவெடுத்துள்ளன.

- ★ ஜனவரிக்குள் மாவட்ட மாநாடுகள்
- ★ ஜனவரி 17 மதல் 30 வரை சென்னை, திருச்சி, கோவை, நெல்லை ஆகிய மையங்களில் மண்டல மாநாடுகள்.
- ★ ஜனவரி 26 உறுதியேற்பு நாள், தேசியக்கொடி ஏந்தி பேரணி, விவசாயிகளையும், தொழிலாளர்களையும்,பொதுத்துறை நிறுவனங்களையும் பாதுகாக்கவும் உறுதி மொழி எடுப்பது.
- ★ டிசம்பர் 20 முதல் ஜனவரி 30 வரை துறைவாரியான கூட்டு மாநாடுகள்.
- ★ ஜனவரி 20 முதல் பிப்ரவரி 5 வரை ஜூம், முகநூல் வழி பரப்புரை,சமூக ஊடக வலைதளங்களில் பிரச்சாரம்.
- ★ பிப்ரவரி 5 முதல் 15 வரை பொது வேலை நிறுத்தத்திற்கு மக்களிடம், கொண்டு செல்ல கலை நிகழ்ச்சியில் தெருமுனை கூட்டங்கள் நடத்த வேண்டும்.
- ★ பிப்ரவரி 18-ம் தேதி மாவட்டந்தோறும் ஆர்ப்பாட்டம் - பொது மக்களை ஈர்க்கின்ற வகையில் நடத்த வேண்டும்.
- ★ பிப்ரவரி 21-ந்தேதி பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு நடத்துவது.

இந்த பிரச்சார இயக்கத்தில் நாமும் பங்கேற்க வேண்டும். அதற்கான வடிவங்களையும் பிரச்சார யுக்திகளையும் செய்தல் வேண்டும்.

**ஏன் இந்த வேலை நிறுத்தம்?**

**வங்கி**

100 லட்சம் கோடி ரூபாய் பொது மக்கள் வைப்புத் தொகையாக,வைத்துள்ள பொதுத்துறை வங்கிகளை தனியார் மயப்படுத்தினால், மக்களின் சேமிப்பு பணம் தனியார் முதலாளிகள் சுவாகா செய்து விடுவார்கள். கல்வி கடன், மருத்துவ கடன், வீட்டுக்கடன், வாகன கடன் என்பவைகளுக்கு அதிக வட்டி (மீட்டர் வட்டி) செலுத்த வேண்டிய நிலை, தொழில் தொடங்க கடனுதவி கேள்வி குறியாக மாறும். மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு கடன் கிடைக்காது. பார்வையாளராக இருக்கப் போகிறோமா?

**இன்சூரன்ஸ்**

இதுவும் அது போலத்தான், தனியார் முதலாளிகளால் தொடங்கப்பட்ட இன்சூரன்ஸ் கம்பெனிகள், LIC மற்றும் நியூ இந்தியா, யுனைடெட் இன்சூரன்ஸ் ஆகிய பொதுத்துறை கம்பெனிகளிடம் போட்டி போட முடியவில்லை. மக்கள் விரும்பவில்லை. LIC-ல் தான் அவர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறது. இன்றைக்கும் அரசின் திட்டங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. இவைகளை கபளிகரம் செய்ய அம்பானி அதானி வகையாறாக்கள் தயாராக இருக்கிறார்கள் LIC யின் சொத்து மதிப்பு பல லட்சம் கோடி. இந்த சொத்தை சூறையாட நாம் அனுமதிக்கப் போகிறோமா?

**ரயில்வே**

பாமர மக்களும் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு குறைந்த கட்டணத்தில் செல்ல பயன்படுத்தி வருவது ரயில் போக்குவரத்து தற்போது 400 இரயில் நிலையங்கள் தனியார் மயம், 100 வழித்தடத்தில் 130 ரயில்கள் தனியாரால் இயக்கப்படும் என கூறுகிறார்கள். சாமான்யனும் இனி ரயிலில் பயணம் செய்ய முடியாது. சரக்கு கட்டணம் உயரும், பொருள்களின் விலையும் உயரும் இதை நாம் ஏற்கிறோமா?

**நிலக்கரி**

மின் உற்பத்தி உள்ளிட்ட இதர தேவைகளுக்கு இந்திய அரசின் நிலக்கரி நிறுவனம் இருக்கிறது. (கோல் இந்தியா) நிலக்கரி சுரங்கங்களை தனியாரிடம் கொடுக்க அரசு முன்வருகிறது. அதனால் நிலக்கரி கொள்முதல் விலை உயரும், மின்சாரம் உற்பத்தி கட்டணம் அதிகரிக்கும். விளைவாக மின்கட்டண உயர்வு தவிர்க்க முடியாது. என்ன செய்யப்போகிறோம்?

**மின்சாரம்**

மின்சாரம் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருந்தால் மட்டுமே தொழில் வளர்ச்சி முன்னேற்றம் காண முடியும். ஆனால் கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்காக மின்சாரத்தை உற்பத்தி செய்யவும், விநியோகிக்கவும் விடும் முடிவை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது. இது அமலானால் மாநில உரிமை பறிபோகும். மின்சாரம் சந்தைப்பொருளாக மாறும் நுகர்வோரை தேர்ந்தெடுக்கின்ற உரிமை தனியார் முதலாளிகளுக்கு இருப்பதால் குறைந்த மின் பயனீடு செய்யும் நுகர்வோர்களுக்கு மின்சாரம் என்பது எட்டாக்கனியாக மாறும். இலவச மின்சாரமும் கேள்விக் குறியாகமாறும். பொதுத்துறையாம் மின்துறையை பொதுத் துறையாக பாதுகாத்திட களம் இறங்க வேண்டாமா?

எனவே தேசத்தின் கோயில்கள் என்று வர்ணிக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாக்க தேசிய பணமாக்கல் திட்டத்தின் அடிப்படையில் குத்தகைக்கு விடுவதை தடுத்திடவும் உழைப்பாளி மக்களோடு மின் ஊழியர்களும் **"மக்களை காப்போம் தேசத்தைக் காப்போம்"** என்ற முழக்கத்தோடு பிப்ரவரி 23- 24-ல் வேலை நிறுத்தம் செய்வோம்.

**வர்க்க கடமையை செய்வோம்!**
**பங்கேற்பை உறுதி செய்வோம்!**






# வாழவைத்த தமிழக மின்வாரியத்தை வாழவைப்போம்!

2022 புத்தாண்டு பிறந்து விட்டது. இளைஞர்களும், மாதர்களும் ஆண்களும், பெண்களும் அனைத்து தரப்பு சமூகத்தினரும் புத்தாண்டில் வண்ணமயமான கனவுகளை ஏந்தி புத்தாண்டில் பயணிக்க துவங்கி விட்டது. ஒவ்வொரு வரும் தங்கள் நம்பிக்கை வைத்துள்ள இறைவனை வேண்டி எதிர்கால கனவுகளை மனுக்களாக அளித்து வந்துள்ளனர். மதம் சார்ந்த நம்பிக்கையிலோ, கடவுள் சார்ந்த நம்பிக்கை யிலோ நாம் எப்போதும் குறுக்கே நிற்பத்தில்லை. நம்பிக்கை தான் வாழ்க்கை என்பதில் அதிக நம்பிக்கை கொண்டவர்கள் நாம். நம்பிக்கை என்பது அறிவியல் சார்ந்தும், உழைப்பு சார்ந்தும் இருக்க வேண்டியது தான் நமது கவலை.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் 22.12.2021 அன்று முடித்து வைக்கப்பட்டது. கடைசி இரண்டு நாட்களில் எண்ணற்ற சட்டங்கள் விவாதமின்றி அவையில் நிறைவேற்றியது. குறிப்பாக அணைகள் பாதுகாப்புசட்டம், பெண்களின் திருமண வயது உயர்வு சட்டம், வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பது உள்ளிட்ட 10 சட்டங்கள் விவாதமின்றி மூர்க்கத்தனமாக48 மணி நேரத்தில் நடைபெற்றது. வேளாண் சட்டங்களை விவசாயிகளின் ஓராண்டுக்கு மேல் போராடியன தனால் திரும்பப் பெற்றுக்கொண்டது ஒன்றியது அரசு. மின் ஊழியர்களின் தொடர் போராட்டத்தால் மின்சார சட்டடத்திருத்த மசோதா தற்காலிகமாக தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் இந்தியாவில் உள்ள பெருபான்மையான விவசாயிகள், சாதாரண மக்கள் அனைவரும் ஒன்றிய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டது. ஒன்றிய அரசு மதத்தின் பெயரால்,ஜாதியின் பேரால் மக்களைபிளவு படுத்தி அரசியல் செல்வாக்கை பெறமுயற்சிப்பதும்,கார்ப்பரேட் முதலாளிகள் கையில் இருக்கும் ஊடகத்தின் மூலமாக ஒன்றிய அரசு பொய் பிரசாரம் செய்து போராடக்கூடிய மக்களுக்கு எதிராக கருத்தியல் ரீதியான திசை திருப்பல் நடவடிக்கைகளை தொடர்ந்து செய்து வருகிறது.

இப்படிப்பட்ட ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை மாநில கட்சிகள் எதிர்த்து போராட முடியாத சூழ்நிலையில் தொழிலாளி வர்க்கமும், விவசாயிகளும் ஒன்றிணைந்து போராட வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.இந்திய மக்களுக்கு தமிழக மக்களுக்கு இன்றைய முக்கிய தேவையாக இருப்பது கல்வி, வேலை வாய்ப்பு, சுகாதாரம் போன்றவைகளாகும்.சுதந்திரம் அடைந்து 74 ஆண்டுகளை கடந்த பின்பும் அடிப்படை தேவைகளை கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் தான் நமது அரசுகள் உள்ளன. மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யாததற்கு

காரணம் முதலாளித்துவ கொள்கை கொண்டஆட்சி என்பதை மக்கள் உணராத காரணத்தால் மீண்டும், மீண்டும் மக்கள் அவர்களுக்கே வாக்களிக்கின்றனர்.அது போலவே மின்சார வாரியமும் ரூ.1,60,000/- கோடிக்கு நஷ்டத்திற்கு காரணம் தமிழகத்தை ஆண்ட ஆட்சியாளர்களே என்று சொன்னால் மக்கள் அதை ஏற்காமல் மின்வாரிய ஊழியர்கள் தான் காரணம் என்பது போலவே ஆட்சியாளர்களும் உள்ளனர்.

மின்வாரியத்தை பாதுகாப்பதற்கு மட்டுமே நாங்கள் வருவோம் என்று கூறியவர்கள் கூட தற்போது பொதுத்துறைகளை பாதுகாக்கும் போராட்டத்திற்கு வருவது பாராட்ட வேண்டும். பக்கத்து வீடு எரிந்து கொண்டிருக்கும் போது அதை அணைப்பதற்கான நடவடிக்கைகளில் அனை வரும் இறங்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டதை நாம் உண்மையில் வரவேற்க வேண்டும்.

ஒற்றுமை என்ற இரும்புக்கம்பிகளால் மின்வாரியம் என்ற வீடு கட்டப்பட வேண்டும் பின்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

சிறிய மற்றும் பெரிய இந்தியாவிலுள்ள 280-க்கும் மேற்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை கார்ப்பரேட்டுகளுக்கு கொடுத்து விட்டு அதே போல வங்கியில் சிறுக சிறுக மக்கள் சேமித்த பணத்தை எல்லாம் கார்ப்பரேட்டுகளுக்கு கடனாக கொடுத்து கடனை கட்டாதவர்களுக்கு கடனாக தள்ளுபடி செய்யும் ஒன்றிய அரசு மக்களுக்கான அரசா? அதானி அம்பானி வகையாறாக்களுக்கான அரசா? என்பதை மக்களுக்கு எடுத்துச்சொல்லி அவர்களை அரியணையிலிருந்து இறக்குவதைத் தவிர தொழிலாளர்களுக்கு வேறு முக்கிய பணி இல்லை.

இந்த புத்தாண்டில் பொதுத்துறைகளை பாதுகாப்பதோடு மட்டுமல்ல, விவசாயிகளை சாமான்ய மக்களை வறுமையில் உழலும் மக்களை ஒன்று திரட்டி அவர்களை காப்பதற்காக நாம் புதிய வடிவில் எழுச்சிகரமான போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. போராட்டங்கள் தான் மக்களை பாதுகாக்கும் என்று சொன்னால் அந்த போராட்டங்களை புத்துணர்ச்சியோடும், புதிய வேகத்தோடும் புத்தாண்டில் முன்னெடுப்போம்.

தமிழக மின்சார வாரியத்தை மட்டுமல்ல, நம்மை எல்லாம் வாழவைத்த பொதுத்துறைகளை வாழவைக்க தொடர்ந்து போராடுவோம்!

**- தி. ஜெயசங்கர்**



# கேங்மேன் தொழிலாளர்களின்

# கோரிக்கையும், போராட்டமும்!

தமிழ்நாடு மின்வாரியத்தில் பணியாற்றும் கேங்மேன் தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் தீர்க்கப்படாமல் உள்ளது. பயிற்சி காலத்தை மூன்று மாதங்களாக குறைத்து காலநிலை ஊதியம் வழங்குவது,சொந்த மாவட்டங்களுக்கு மாறுதல் என கோரிக்கை உள்ளது.

பத்து மாதங்கள் கடந்தும் அவர்களுக்கு வாரிய ஊழியர்களுக்கான எந்த சலுகையும் வழங்கப்படவில்லை! அனைத்தும் வாரிய கூட்டத்தில் அதுவும் Full Board கூட்டத்தில் முடிவு எடுக்க வேண்டுமாம். வாரியத்தலைவருக்கு கொடுக்கலாம் என மனமிருந்தால் கூட எல்லாமே மேல் மட்டத்தில் பேசிதான் கொடுக்க வேண்டும் என கீழ்மட்ட அதிகாரிகள். இதுவரை 9 தோழர்கள் தங்களது உயிரை தியாகம் செய்த பின்பும், பலர் விபத்தில் அடிப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்புதான், தொடர்ந்து நாமும் வலியுறுத்தி வந்ததின் அடிப்படையில் மருத்துவ காப்பீடு திட்டத்தில், கேங்மேன் பணியாளர்களை சேர்த்துள்ளனர்.

பணியில் சேர்ந்த கேங்மேன் பணியாளர்கள் கண்ணீர் கதைகள் ஏராளம்! ஏராளம்! நிரந்தர தன்மை வாய்ந்த பணிகளில், அதுவும் களஉதவியாளர் செய்யும் பணிகளில், கேங்மேன் பணியாளர்களை வைத்து, குறைந்த தொகுப் பூதியத்தில் சொந்த மாவட்டம் விட்டு வெகுதொலைவில் பணியமர்த்தி பணிகளை செய்ய சொல்வதும் முதன்மை அரசு நிறுவனமான மின்வாரியத்திற்கு அழகல்ல! முந்தைய அதிமுக அரசிடம் எவ்வளவும் அழுத்தம் கொடுத்து பேசியும் மாற்றம் காண இயலவில்லை.

பட்டம்,பட்டயம் படித்து, இந்த பணிக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி 5-ம் வகுப்பு என நிர்ணயம் செய்த பின்பும் கூட எத்தனை தோழர்கள் போட்டி போட்டு இந்தப்பணியில் தேர்வாகி, மின்வாரியத்தில் வேலை என்ற கனவோடு வந்து பணியில் சேர்ந்துள்ளனர். இவர்களின் படிப்புக்கு ஏற்ப உள்முக தேர்வில் வேலை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

பணியில் சேர்ந்த கேங்மேன் தோழர்கள் கடும் மனஅழுத்தத்தில் அனுதினமும் பணியாற்றி வருகின்றனர். ஊதியப்பற்றாக்குறை, மனைவி குழந்தைகள் பெற்றோரை பார்க்காமல் இருப்பது போன்ற காரணங்களும் ஒன்று. பல்வேறு மாவட்டங்களில் காலிடப்பணியிடம் உள்ளதை கணக்கில் கொண்டு இந்த பணியாளர்களுக்கு, சொந்த மாவட்டங்களுக்கு மாறுதல் உத்தரவு வழங்கினால் மிகவும் நன்றாக இருக்கும்.

மின் வாரியத்தில் தற்போதும் வழங்கும் தளவாடப் பொருட்கள், PSC கம்பம் ஆகியவை தரமானதாக இல்லை. கம்பி குறைவாக வைத்து கான்கிரிட் போடுவதாலே கம்பம் வலுவிழந்து கீழே விழுகிறது.இதில் தான் விருதுநகர் காளிராஜ் என்ற கேங்மேன் தோழர் பலியானார், பல தோழர்கள் விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதே போல கிளாம்புகளும் கட்டாகி கிராஸ் ஆர்ம் கீழே விழுகிறது.

எனவே தான் மத்திய அமைப்பு, வாரியத்திற்கு சொந்தமான RCC யார்டில் மின்வாரியமே கம்பம் தயாரிக்க வேண்டும் என கூறி வருகிறோம். வெளி மாநிலங்களில் கம்பம் வாங்கினால் தரமற்றவையாக உள்ளது. தரமான தளவாட பொருட்கள் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகிறோம்.

இந்த பின்னனியில் கேங்மேன் தோழர்கள் இந்த கோரிக்கைகளை முன்வைத்து, திருச்சி,கோவை,சென்னை ஆகிய இடங்களில் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். இது தமிழகம் முழுவதும் போராட்டமாக மாறும் என்பதில் எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது.

தொழிலாளர்களின் நலனில் அக்கறையுள்ள விடியல் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்ப்பும் அனைவரிடமும் உள்ளது.




# சவால்கள் நிறைந்த 2022-ம் புத்தாண்டே வருக!

கடந்த இரண்டாண்டுகளாக கொரானா முதல் அலை, அதனைத் தொடர்ந்து இரண்டாம் அலை மக்களை தொழிலாளர்களை வாட்டி வதைத்து. தொழில் முடங்கியது. உலகம் முழுவதும் 50 லட்சம் மக்கள் கொரானா தொற்றால் உயிர் இழந்துள்ளனர் என்று உலகசுகாதார அமைப்பு தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது. மீண்டும் கொரானா நோய் தொற்றின் பரிணாமமாக ஒமைக்கரான் எனும் வைரஸ தொற்று உலகம் முழுவதும் பதவி வருகிறது. ஒமைக்கரான் 3வது அலையால் ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவும் 3வது அலையிலிருந்து தப்பிக்க இயலாது என்று உலகசுகாதார அமைப்பு எச்சரிக்கை செய்துள்ளது. 3வது அலை இந்தியாவில் ஏற்படாமல் இருக்க இந்திய சுகாதார அமைப்பு கடுமையான கட்டுப்பாடுகளையும் தடுப்பூசிகளையும் போட வேண்டும் என்று கட்டாயப்படுத்தி வருகிறது. இந்த நிலையில் தான் நாம் புத்தாண்டை எதிர்கொள்கிறோம்.

மின்வாரிய தொழிலாளர்களுக்கு கடந்த இரண்டாண்டுகளுக்கு மேலாக பொது முடக்கத்தின் காரணமாக அரசு பஞ்சப்படியை வழங்கவில்லை, சரண்டர் விடுப்பையும் வழங்கவில்லை. பஞ்சப்படி மற்றும் சரண்டர் விடுப்பின் மூலமாக 10 லட்சம் அரசு ஊழியர்களின் தொகை பல ஆயிரம் கோடிகள். கொரானா நோய் தடுப்பு நடவடிக்கை செலவு விடப்பட்டதில் மின்வாரிய ஊழியர்களுக்கும்,அரசு ஊழியர்களுக்கும் மகிழ்ச்சியே, பேரிடர் காலத்தில் அரசோடு துணை நின்று மக்களுக்கு சேவை செய்வதில் மின்சார ஊழியர்களுக்கு நிகர் மின்சார ஊழியர்களே என்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். இந்த நிலையில் தான் நிறுத்தி வைக்கப்பட்ட பஞ்சப்படி உட்பட அனைத்து பலனையும் ஒன்றிய அரசு தொழிலாளர்ளுக்கு வழங்கியுள்ளது. அதே போல தமிழக அரசு ஊழியர்களுக்கும் வழங்குவார்கள் என்று நம்புகிறோம்.

மின்சார வாரியத்தில் 52,000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் உள்ள நிலையில் அவர்களின் பணிச்சுமையை ஏற்கனவே பணியில் உள்ளவர்கள் கூடுதல் பணிச்சுமையோடு பணி செய்து வருகின்றனர். இதனால் மனஅழுத்தம் ஏற்பட்டு எண்ணற்ற விபத்துக்கள் ஏற்படுகிறது. மின்வாரியம அறிவித்த காலிப்பணியிட அறிவிக்கையில்

1. களஉதவியாளர்-2900
2. கணக்கீட்டாளர் -1300
3. உதவி பொறியாளர்-575
4. இளநிலை உதவியாளர்(கணக்கு) -500

கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு அறிவித்த அறிவிக்கையின் படி காலிப்பணி இடங்களை நிரப்பிட வேண்டும்.ஆரம்ப நிலை பதவிகளான களஉதவியாளரில் 15,000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் உள்ளது. இதில் ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டும் மீதமுள்ள 5000 கேங்மேன் பணியாளர்களை நிரப்பிட வேண்டுமென்ற கோரிக்கை நிலுவையில் உள்ளது. தமிழக அரசு தனது தேர்தல் அறிக்கையில் அரசு நிறுவனங்களில்உள்ள ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்வோம் என்று சொன்னதை மின்வாரியத்தில் அமலாக்கம் செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

புதியதாக மின்வாரியத்தில் இணைந்த 10,000 கேங்மேன் பணியாளர்களை கொத்தடிமைகளாக நடத்தாதமல் அவர்களும் மின்வாரியத்தின் நிரந்தரப்பணியாளர்கள்,

மதிப்புமிக்க தொழிலாளர்கள் என்று மின் வாரிய நிர்வாகம் உணர வேண்டும்.

கேங்மேன் பணியாளர்களுக்கு மூன்று மாதஙகள் மட்டுமே பயிற்சி, உள்முக தேர்வு அனுமதி, சொந்த மாவட்டங்களுக்கு விருப்ப மாறுதல் ஊர்மாற்றம் விபத்து சிகிச்சைக்கான சலுகை போன்ற அனைத்து சலுகைகளையும் உரிமைகளையும் பெற்றிட ஒன்றுபட்டு ஓரணியில் புத்தாண்டில் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

புதிய பதவிகளை அனுமதிப்பதில்லை. துணை மின் நிலையஙகளுக்கு புதிய பதவிகள் அனுமதியில்லை என்ற கொள்கையோடு உள்ள மின் வாரியத்தை நாம் சந்திக்க வேண்டியுள்ளது. 30 சதம் அதிக ஊழியர்களை வைத்துக் கொண்டுள்ளாதாக சொல்லும் மின்வாரியம் ஆட்குறைப்பு, நடவடிக்கைகளில் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, புதிய பதவிகளை அனுமதிக்காமல் காலம் தாழ்த்தும் போக்கினை இனி மேலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. மின் வாரியத்தில் நிதி சரியில்லை என்ற காரணம் காட்டி பஞ்சப்படி, சரண்டர்,.புதிய பதவிகள் அனுமதி, புதிய நியமனங்களை எடுக்காதது,போன்ற நிர்வாகத்தின் நடவடிக்கையை எதிர்த்து புத்தாண்டில் போராட்ட களம் அனுமதிக்க வேண்டியுள்ளது.

01.12. 2019 முதல்அளிக்க வேண்டிய ஊதிய உயர்வு 24 மாதங்களை கடந்தும் பேச்சுவார்த்தை துவங்கப்படாமல் இருப்பது, பழைய பென்சன் திட்டத்தில் உள்ளவர்களை பழைய பென்சனில் பாதுகாக்க வேண்டியது, இதற்கும் மேலாக மேற்கண்ட அனைத்தையும் பெறவேண்டுமென்று சொன்னால் மின்துறை பொதுத்துறையாகவே நீடிக்க வேண்டும்.

எனவே மேற்கண்ட கோரிக்கைகளை உரிமைகளை பெறுவதற்க நாம் புத்தாண்டில் போராட்டகளம் அமைத்து போராடினால் மட்டுமே பெற முடியும்.

**அப்படிப்பட்ட போராட்ட களம்**
**அமைக்கக்கூடிய**
**புத்தாண்டே வருக!**
**புத்துணர்ச்சி தருக!!**

**- தி. ஜெயசங்கர்**

மிகவும் ரகசியத்துடன் செயல்படுவதாக கூறப்படும் கிரிப்டோ கரன்சி எனப்படும் டிஜிட்டல் பணம் எங்கிருந்து வருகிறது என்று அதன மூலத்தைக் கூட கண்டுபிடித்துவிடலாம்! ஆனால் தேர்தல் பத்திரங்களின் ரிஷி மூலத்தையும் நதி மூலத்தையும் கண்டுபிடிக்க இயலாது. தேர்தல் பத்திரங்களுக்கு தடை விதியுங்கள்! அரசியல் ஊழலுக்கு சட்ட முலாம் பூசுவதை நிறுத்துங்கள்.



# தமிழ்நாடு பவர் இன்ஜினியர்ஸ் ஆர்கனைசேஷனின்

## 6வது மாநில மாநாடு

## கோவை மாநகரில் வெற்றிகரமாக நடைபெற்றது!

தமிழ்நாடு பவர் இன்ஜினியர்ஸ் ஆர்கனைசேஷனின் 6வது மாநில மாநாடு கோவை மாநகரில் 11.12.2021 அன்று ஷர்ஷ மஷால் தோழர் எஸ்.பி.ஆர். அரங்கத்தில் நடை பெற்றது. முதல் நிகழ்ச்சியாக கோவை மண்டலத்தின் மூத்த பொறியாளரும் மத்திய அமைப்பின் கிளை நிர்வாகியாக செயல்பட்டவருமான தோழர் ஜெ. கனகமுத்து, **TNPEO** வின்கொடியை ஏற்றி வைத்தார். அதனையடுத்து தியாகிகளின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநாட்டு அரங்கில் அஞ்சலி தீர்மானத்தை TNPEO மாநில துணை தலைவர் பொறிஞர் கருணாம்பிகை முன்மொழிந்தார். அதன்பின் மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவரும், மத்திய அமைப்பின் கோவை மண்டல செயலாளருமான தோழர் வி.மதுசூதனன் மாநாட்டு வரவேற்புரையை நிகழ்த்தினார். அவர் தனது வரவேற்புரையில் கோவைமண்ணின்பாரம்பரியத்தையும்,தொழிலாளர் வர்க்கம் நடத்திய வீரஞ்செறிந்த போராட்டங் களையும், மாவட்டத்தின் இயற்கை சூழலையும் கூறி கொங்கு மண்டலத்தில் நடைபெறும் மாநில மாநாடு வெற்றிபெற வேண்டுமென கூறினார்.

அடுத்து மாநாட்டின் தலைவரும் TNPEOவின் மாநில தலைவருமான பொறிஞர் கே.ஜீவானந்தம் மத்திய அரசின் தொழிலாளர் விரோத கொள்கைகளை விளக்கியும், விவசாயிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்ட வெற்றியைக் கூறி மின்வாரியத்தில் TNPEOவின் பலத்தை அதிகரிக்க வேண்டுமென கூறி தனது தலைமை உரையை நிகழ்த்தினார்.

பின்னர் மாநாட்டை துவக்கி வைத்து EEFI யின் அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர் பிரசாந்தோ நந்தி சௌத்ரி அவர்கள் பல்வேறு நாடுகளின் மின்சார கொள்கைகள், மத்திய அரசின் மின்சார சட்டத்திருத்த மசோதா, கார்ப்ப ரேட்டுகளுக்கு ஆதரவான மத்திய அரசின் நடவடிக்கைகள், தொழிலாளர் விரோத செயல்பாடுகள் போன்ற பல்வேறு கருத்துக்களை முன்வைத்து நாம் ஒன்றுபட்டு போராட வேண்டிய அவசியம் குறித்தும் விளக்கி மாநாட்டை துவக்கி வைத்தார்.

அதனையடுத்து கடந்த சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டிற்கு பின்னர் நடைபெற்ற பணிகள், இயக்கங்கள் ஸ்தாபனபலம், குறித்த வேலை அறிக்கையை TNPEOவின் பொதுச்செயலாளர் பொறிஞர் கே.அருட்செல்வன் முன்வைத்தார். பொருளாளர் வரவு- செலவு அறிக்கையை பொறிஞர் எம். முருகானந்தம் சமர்ப்பித்தார்.

அறிக்கையின் மீது 16 பிரதிநிதிகள் விவாதத்தில் பங்கேற்றனர். மாநாட்டில் 156 பிரதிநிதிகள் தமிழகம் முழுவதிலுமிருந்து பங்கேற்றுள்ளனர்.

மாநாட்டை கோவை பாராளுமன்ற உறுப்பினர் தோழர் பி.ஆர். நடராஜன் அவர்கள் வாழ்த்தி பேசினார்கள். அவர் தனது வாழ்த்துரையில் மத்திய அரசின் மின்சார சட்டத்தை எதிர்த்து நாடாளுமன்றத்தில் திமுகவுடன் இணைந்து குரல் கொடுப்போம் என்றும் மத்திய அரசின் நடவடிக்கைகள் குறித்தும் விளக்கி பேசினார்.

மத்திய அமைப்பின் மாநில தலைவர் தோழர் தி.ஜெயசங்கர் அமைப்பின் வளர்ச்சியின் அவசியம் குறித்தும் இன்றைய தேவை குறித்தும் விளக்கி வாழ்த்துரை வழங்கினார்.

பிரதிநிதி தோழர்களின் விவாதத்திற்கு பின்பு தொகுப்புரை அளிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில் கீழ்கண்ட புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநில தலைவர்

பொறிஞர் **ஆர்.குருவேல்**

பொதுச்செயலாளர்

பொறிஞர் **கே.அருள்செல்வன்**

பொருளாளர்

பொறிஞர் **கே. ஆதன் இளங்கீரன்**

அமைப்புச் செயலாளர்

பொறிஞர் **கே. ஜீவானந்தம்**

துணை பொதுச்செயலாளர்கள்

**எஸ். அப்பாதுரை, எம். இருதயராஜ், ஆர்.அடரலசு, ஆர்.சோமசுந்தரம்,**

துணை தலைவர்களாக

**கே.ரவிச்சந்திரன், டி.கருணாம்பிகை, எம்.ராமசுப்பு, ஏ.இ. அருணாசலம், எம்.பனிமலர், எஸ். இளங்கோ, ஜி. கோபாலகிருஷ்ணன், பி.முத்துலட்சுமணன், எம். குமரேச பாண்டியன், கே.சண்முகம், வி. சுரேஷ், டி.இராஜகோபால்**

செயலாளர்களாக

**ஏ.முருகானந்தம், டி.அறிவழகன், எம். ஆனந்தம், எம்.முனிராஜ், எம்.மயிவாகனன், ஜெ. ஏங்கெல்ஸ், ஆர். கோகுலவர்மன், ஆர். ரணதிவே, ஆர். ராஜேஷ்கண்ணா, பி.துரை, ஆர். முருகேஷ், கே. கோபிநாத்** ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகிகளை வாழ்த்தி மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கடந்த தமிழக அரசின் தொழிலாளர் விரோத,மக்கள் விரோத, தனியார்மய நடவடிக்கைகளுக்கு எதிரான மத்திய அமைப்பின் நடவடிக்கைகள் குறித்தும் அதில் TNPEOவின் பங்களிப்பு குறித்தும்,மின்சாரம் சட்டத்திருத்த மசோதா 2021-ஐ எதிர்க்க வேண்டிய அவசியம் குறித்தும் TNPEOவின் விரிவாக்கம் குறித்தும் விளக்கி பேசி வாழ்த்துரை வழங்கினார்கள்.

**நிறைவாக சிஐடியுவின் தமிழ் மாநிலக் குழுவின் தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தோழர் அ.சவுந்தரராஜன் தமிழக அரசியல் நிலைமை குறித்தும், தமிழக தொழிலாளிகள் எதிர்ப்பார்ப்புகள் குறித்தும், அதன் மீது தமிழக அரசின் கவனத்திற்கு நாம் கொண்டு செல்ல வேண்டிய தற்போதைய சூழல் குறித்தும் மத்திய அரசின் மக்கள் விரோத கொள்கைகள் மீது நாம் மேற்கொள்ள வேண்டிய இயக்கங்கள் குறித்தும், அதற்கு நமது ஸ்தாபன பலத்தை அதிகரிக்க வேண்டிய அவசியத்தையும் குறித்தும் விரிவான சிறப்புமிகு கருத்துரையை நிகழ்த்தி மாநாட்டை நிறைவு செய்தார்.**

இறுதியாக மாநாட்டு வரவேற்புரை குழுசெயலாளரும், மாநாட்டில் துணை பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்ட தோழர் ஆர். சோமசுந்தரம் நன்றியுரை கூறிட மாநாடு வாழ்த்து முழக்கங்களோடு இனிதே நிறைவு பெற்றது.

மாநாடு வெற்றிபெற பாடுபட்ட கோவை மண்டலக்குழு தோழர்கள் குறிப்பாக மாநில செயலாளர் தோழர் வி. மதுசூதனன், மாநில துணை தலைவர் டி.கோபாலகிருஷ்ணன், கிளை செயலாளர்கள் டி.மணிகண்டன் - கோவை மாநகர் எம்.மணிகண்டன் - கோவை வடக்கு, ரத்தினகுமார் - கோவை தெற்கு, எம்.சண்முகம்- நீலகிரி, எம். கிருஷ்ணகுமார்- உடுமலை, பி.நாகராஜ் - திருப்பூர்,பி.ராமலிங்கம்- பல்லடம், ஆகியோருக்கும் TNPEO கோவை கிளைகளின் நிர்வாகிகளான தோழர்கள் விவேகானந்தன், குருபாதம், சண்முக சுந்தரம், சிவகுமார், உமாதேவி உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் மத்திய அமைப்பின் வாழ்த்துக்களும், பாராட்டுகளும்.

**- எஸ்.இராஜேந்திரன்**



# NPC ரிப்போர்ட் அனல் மின் நிலைய ஆட்குறைப்பு அறிக்கை அறிவியல் பூர்வமற்ற ஆய்வறிக்கையை கைவிடுக !

கடந்த 20.03.2021 அன்று NPC என்று அழைக்கப்படும் National productivity Council தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு வருகை தந்தது. வாரிய ஆணை BP No. 23 தேதி 16.09.2020 அடிப்படையில் 2.8 கோடி செலவில் அனல் மின் நிலையங்களில் உற்பத்தி மற்றும் மனித வளம் ஒப்பிட்டு அறிக்கையை ஆய்வு செய்து அளிக்க அமைக்கப்பட்டது தான் இந்த NPC .

தூத்துக்குடி அனல் மின் நிலையம் 1977-79 காலகட்டத்தில் 1வது , 2வது . 3வது யூனிட்டும் 1994 ஆம் ஆண்டு 4வது 5வது யூனிட்டும் துவக்கப்பட்டது. 1050 மெகாவாட் உற்பத்தி திறன் உடைய இம்மின் நிலையம் கடந்த 40 ஆண்டுகளாக தமிழகத்தின் 20 சதவீத மின் தேவையை பூர்த்தி செய்து வருகிறது.

வாரிய ஆணை 67 தேதி 20.08.1997-ன் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள நான்கு அனல் மின் நிலையங்களில் பணி ஒதுக்கீடு மற்றும் பணியாளர் வரைமுறை தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்க ரூ. 26 லட்சம் செலவில் NPC அமைக்கப்பட்டது. கடந்த 12.02.1998 அன்று NPC கமிட்டி அறிக்கை அளித்தது. அதன் மீது நான்கு அனல் மின் நிலைய தலைமை பொறியாளர்கள் மற்றும் உற்பத்தி உறுப்பினர் ஆகியோரிடம் கருத்துக்கள் பெறப்பட்டு BP No. 16 தேதி 28.04.1999 பிறப்பிக்கப்பட்டது.

அனல் மின் நிலையங்களில் ஊழியர்கள் பொறியாளர்கள் எண்ணிக்கையை சரிபாதியாக குறைக்க NPC கமிட்டி பரிந்துரை அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட வாரிய ஆணை 16ஐ எதிர்த்து மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) சென்னை உயர்நீதி மன்றத்தில் தடை உத்தரவு பெற்றது.

நீதிமன்ற தடை காரணமாக Memo (per) No. 34368/c1/99-dt 28.06.199 ஏ-ன்படி BP No. 16 நிறுத்தி வைக்கப்பட்டது. வாரியம் உயர்நீதிமன்றத்தில் NPC கமிட்டி பரிந்துரை அல்ல, இது High leval கமிட்டி பரிந்துரை எனவே Class - I பொறியாளர்களை குறைக்க அதிகாரம் உள்ளது என வாதிட்டு பல கோட்டங்களை இணைத்து மேற்பார்வை மற்றும் செயற் பொறியாளர்களை பெருமளவு குறைத்தது.

நீதிமன்ற தடையை ரத்து செய்ய இயலாத வாரியம் உறுப்பினர் / உற்பத்தி மற்றும் உறுப்பினர் / பகிர்மானம் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து அதற்கு High leval கமிட்டி என நாமகரணம் சூட்டி ஆட்குறைப்பை வாரிய ஆணை 16 மற்றும் NPC பரிந்துரையை மறைமுகமாக அமல்படுத்த BP No. 66 தேதி 24.08.2000 என்கிற உத்திரவை பிறப்பித்தது.

இந்த பின்னணியில் மீண்டும் NPC 2.8 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளதை தூத்துக்குடி அனல்மின் நிலைத்தில் NPC கமிட்டி 20.03.2021 அன்று நடத்திய கூட்டத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பு கடுமையாக தனது ஆட்சேபனையை பதிவு செய்தது.

தற்போது NPC தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 11 கோட்டங்களில் ஊழியர்களிடம் பெற்ற பூர்த்தி செய்த படிவம் அடிப்படையில் ஒரு அறிக்கையை வாரியத்திடம் அளித்து உள்ளது.

வாரியத்திற்கு சமர்ப்பிக்கும் முன் தொழிற்சங்கங்களிடமும் TTPS நிர்வாகத்துடனும் கலந்தோலோசிக்கப்படும் என உறுதி அளித்த NPC

எவ்வித முன்னறிவிப்பு இல்லாமல் TTPS-ல் 7 மாதமாக இயங்கி வந்த தனது அலுவலகத்தை கலைத்து விட்டு சென்னை சென்று வாரியத்திற்கு அறிக்கை அளித்து உள்ளது.

அதன்மீது 02.12.2021 அன்று வாரியம் உயர்மட்ட ஆலோசனை நடத்தி உள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 11 கோட்டங்களில் 242 பதவிகளை EE முதல் முகவர் வரை குறைப்பதற்கு பரிந்துரைத்துள்ளது. எவ்வித விஞ்ஞானபூர்வ ஆய்வும் இல்லாமல் வெறும் கணித கணக்கீடாக NPC அளித்துள்ள அறிக்கை ஏற்கத்தக்கதல்ல என மின் ஊழியர் மத்திய அமைப்பு 05.12.2021 அன்று TTPS வருகை தந்த உறுப்பினர் / உற்பத்தி அவர்களிடம் தெரிவித் துள்ளது.

அதிகாரிகள், பொறியாளர்கள் முன்னிலை யில் NPCகமிட்டி ஆட்குறைப்பு செய்ய வரவில்லை. உற்பத்தி திறனை மேம்படுத்த ஆலோசனை மட்டுமே வழங்கப்பட்டும் எனவும் NPC கமிட்டியின் ஆய்வறிக்கை அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் வழங்கப்படும் எனவும் உறுதி அளித்துள்ளது. 2.8 கோடியை வாரியத்திடம் பெற்ற NPC கமிட்டி அனல் மின் நிலைய பணி நிலைமைகளை ஆய்வு செய்யாமல், ஒவ்வொரு ஊழியர்/பொறியாளருக்கம் அச்சடிக்கப்பட்ட தாளில் பணிதளத்தில் வேலை தன்மையை வாங்கி, தானே அறிக்கை தயாரித்ததாக கூறி கொண்டது.

NPC அறிக்கை ஏற்கபட்டால் நீதிமன்றத்திலும் வீதிமன்றத்திலும் போராட தயாராவோம்!

**- எஸ்.அப்பாதுரை**

# கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணக் காப்பகம் தோழர் என். இராமகிருஷ்ணன் மறைவு



தோழர் என். சங்கரய்யாவின் சகோதரரும் கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்று நாயகர்களை ஆவணப் படுத்தியும், மார்க்ஸ், ஏங்கெல்ஸின் தத்துவங்களையும், கம்யூனிஸ்ட் கோட்பாடுகளை எளிதில் புரிந்து கொள்ளுகின்ற வகையில் எழுத்துவடிவில் விளக்கிய அருமைத் தோழர் என். இராமகிருஷ்ணன் அவர்கள் 12.12.2021 அன்று மதுரையில் காலமானார்.

மத்திய அமைப்பின் சார்பாக மாநில தலைவராக இருந்த தோழர் கே. ரமணி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒரு வர்க்கப் போராளியின் காலச்சுவடுகள் என்ற நூலையும் நமது ஸ்தாபகத் தலைவர் தோழர் து. ஜானகிராமன் அவர்களின் மறைவுக்கு பின்பு அவரது வாழ்க்கை வரலாற்றை நூலையும் செம்மைப்படுத்தி புத்தகத்திற்கு உயிர் ஊட்டியவர்.

தோழரின் மறைவு ஒரு மிகப்பெரிய இழப்பு, அவர் எழுதிய பல்வேறு புத்தகங்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது பிடிப்பை உருவாக்குகின்ற வகையில் அமைந்துள்ளதை எதிர்கால தலைமுறைக்கு கொண்டு செல்வதே தோழர் என்.ஆர்-க்கு நாம் செலுத்தும் அஞ்சலி

# சென்னை மின்வாரிய தலைமையகத்தில் பணியாளர்களின் வருகையை முகம் கொண்டு பதிவு செய்வது சம்மந்தமான உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION**
**SECRETARIAT BRANCH**

**Circular Memo. No.49990/A23/A231/2021-1, dated 31.12.2021.**

Sub: TANGEDCO – Headquarters – Registration of attendance by physical and facial recognition at the places of facial recognition device – Instructions - Issued.

*****

In Headquarters, 12 facial recognition devices have been provided as detailed below :-

| | | | |
|---|---|---|---|
| i. | New TANTRANSCO Building | - | 4 Nos. (Main Entrance) |
| ii. | RAPDRP (Data Centre) | - | 1 No. |
| iii. | Load Despatch Centre | - | 1 No. |
| iv. | Near VIP Gate NPKRR Building (Eastern wing) | - | 1 No. |
| v. | Western Wing NPKRR Building | - | 2 Nos. |
| vi. | Main centre portico NPKRR Building | - | 3 Nos. |
| | Total | - | 12 Nos. |

2. It is proposed to implement the above said Facial Recognition Attendance System for registering their attendance with effect from 03.01.2022 both the method of attendance i.e. physical as well as Facial Attendance Recognition System upto 31.01.2022. From the month of February 2022, the attendance of the employees enrolled through the Facial Recognition Attendance System only. Hence, all the officers in the Headquarters are directed to instruct the employees under their control to register their attendance both physically and through the device of Facial Recognition Attendance System at any one of the places mentioned above.

3. It is also instructed that those who have not enrolled their Facial Recognition in the Facial Recognition Attendance System so far, are directed to enroll their facial recognition immediately through Thiru E.Dinakaran, Assistant Executive Engineer/Information Technology wing. His contact No. is 9445857517.

4. The above instruction should be adhered scrupulously.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**A.MANIKKANNAN**
**SECRETARY**

To

# ஜனவரி 19
# தியாகிகள் தினம்!

- எஸ்.இராஜேந்திரன்

இந்திய தேசத்தில் சுதந்திரத்திற்கு பின்பு 1980 களில் பாரத பிரதமராக இருந்த இந்திராகாந்தி உழைப்பாளிகளின் உணர்வுகளை தொழிலாளிகள் பெற்ற உரிமைகளை பறிக்க நடவடிக்கை எடுத்தார். தொழிலாளர்களின் உணர்வுகளை புரிந்து கொண்ட தொழிற்சங்கங்கள் 1971-ல் ஜூன் மாதம் 4-ந்தேதி மும்பை நகரில் கூடி தேசிய தொழிற்சங்கங்களின் மேடை என ஒன்றை உருவாக்கி அந்த மாநாட்டின் முடிவாக 1981 நவம்பர் 23-ல் பாராளுமன்றத்தை நோக்கி பேரணி நடத்துவதென முடிவு எடுத்தது. அதன் அடிப்படையில் நவம்பர் 23-ல் லட்சசகணக்கான தொழிலாளர்கள் நாடாளுமன்றத்தை நோக்கி திரண்டர். அன்று அங்கு நடைபெற்ற பொதுக்கூட்ட மேடையிலேயே 1982 ஜனவரி 19-ல் பொது வேலை நிறுத்தத்தை பிரகடனம் படுத்தியது. இதுதான் சுதந்திர இந்தியாவின் நாடு தழுவிய முதல் வேலை நிறுத்தம்.

இந்த வேலை நிறுத்தத்தை முறியடிக்க மீண்டும் ஒரு நெருக்கடி நிலையை உருவாக்க நினைத்தார் திருமதி இந்திராகாந்தி அம்மையார். அனைத்து மாநில முதல்வர்களுக்கும் வேலைக்கு வராதவர்கள் மீது டிஸ்மிஸ் தண்டனை உள்ளிட்ட அனைத்து நடவடிக்கையும் எடுக்க வலியுறுத்தினார். தமிழகத்தை அன்று ஆட்சி செய்த திரு.எம்.ஜி.ஆர். தலைமையிலான அதிமுக அரசு தொழிலாளர்களை மிரட்டியது. தலைவர்களை அச்சுறுத்தியது. அச்சுறுத்தலையும் மீறி தமிழக தொழிலாளர்களும்,விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் ஜனவரி 19-ல் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கினார்கள்.

வேலை நிறுத்த தினத்தன்று ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் இருந்த திருமெய்ஞானபுரத்தில் (தற்போது நாகை மாவட்டம்) அரசின் பேருந்துகள் நடுவழியில் நிறுத்தப்பட்டு பேருந்தின் டயரின் காற்றுகள் பிடுங்கப்பட்டன. பேருந்துக்கு எந்த சேதாரமும் இல்லை. ஆனால் தஞ்சை மாவட்ட எஸ்.பி. தொழிலாளர்களுக்கு ஆதரவளித்த விவசாயிகளின் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டதோடு துப்பாக்கி சூடும் நடத்தினார்.

அப்போது ஏற்பட்ட களேபரத்தில் வயலின் நடுவே தப்பி ஓடிக்கொண்டிருந்த விவசாய கூலி தொழிலாளர்களான அஞ்சான், நாகூரான் சுட்டுக்கொல்லப்பட்டனர். மன்னார் குடியில் ஞானசேகரனும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

விவசாய கூலித்தொழிலாளர்கள் நமக்கு அளித்த பொது வேலை நிறுத்த ஆதரவின் மூலம் இன்னுயிரை நீந்த இந்த தியாகிகளின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி19-ம் தேதி தியாகிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

சிஐடியு தொழிலாளர்கள் அனைவரும் தங்களது சந்தாவிலிருந்து ஒரு ரூபாய் என்ற முறையில் ஆண்டுதோறும் விவசாய தொழிலாளர் சங்கத்திற்கு வழங்கி வருகின்றனர்.

1982-ல் துவங்கிய முதல் அகில இந்திய வேலை நிறுத்தம் அதனையடுத்து ஆண்ட, ஆளுகின்ற ஒன்றிய அரசுகளின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத கொள்கைகளுக்கெதிராக பொது வேலை நிறுத்தங்களை இந்திய தொழிலாளி வர்க்கம் நடத்தி வருகிறது.

எதிர்வரும் 2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-24-ல் தற்போது மத்தியில் உள்ள பிஜேபி அரசாங்கத்தின் மக்கள் விரோத,தொழிலாளர் விரோத கொள்கைகளை முன்வைத்து 21வது பொது வேலை நிறுத்தத்தை நடத்திட மத்திய தொழிற்சங்கங்கள் முடிவு எடுத்துள்ளன.

விவசாயிகளுக்கான போராட்டங்களும்,
தொழிலாளர்களுக்கான போராட்டங்களும்
வர்க்க ஒற்றுமையோடு முன்னெடுத்துச்
செல்வோம்
விதைத்தவன் உறங்கலாம்
விதைகள் ஒரு போதும் உறங்குவதில்லை
தியாகிகள் நாமம் வாழ்க

# தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் 8வது வெள்ளிவிழா மாநாடு

நமது மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் 8வது மாநில மாநாடு மதுரை மாநகரில் 18, 19.12.2021ல் நடைபெற்றது.

காலை 9.30 மணியளவில் ரவுண்டானா அருகிலிருந்து பேரணி தோழர் என்.செல்வராஜ் அவர்கள் தலைமையில் புறப்பட்டு தோழர். எஸ்.பி.ஆர் நினைவரங்கத் திடலை அடைந்தது. 8வது மாநில மாநாட்டு கொடியினை விண்ணதிரும் ஒலி முழுக்கங்களுக்கு இடையே மாநில தலைவர் தோழர்.என்.சின்னசாமி அவர்கள் ஏற்றி வைத்தார். பின்னர் மாநாட்டு பிரதிநிதிகள் தியாகிகள் சின்னத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

10.05 மணியளவில் பொது மாநாடு துவங்கியது. மாநில துணைத்தலைவர் தோழர். எஸ்.எஸ். சுப்பிரமணியன் அவர்கள் அஞ்சலி தீர்மானத்தை முன் மொழிந்தார்.

மாநாட்டின் வரவேற்பு குழுவின் செயலாளர் தோழர். வி.பிச்சைராஜன் அவர்கள் மதுரை சிறப்பு தொழிற்சங்க தலைவர்களின் தியாக வரலாற்றை நினைவுக்கூறி மாநாட்டு பிரதிநிதிகளையும், சிறப்பழைப்பாளர்களையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

மாநிலத் தலைவர் தோழர்.என். சின்னசாமி அவர்கள் உலக நிலைமை, தேசிய நிலைமை லாபம் ஈட்டுகின்ற ஆயுள் காப்பீட்டு கழகம், வங்கி, ரயில்வே, துறைமுகம், விமானநிலையங்கள், சாலைப்போக்குவரத்து என அனைத்துப் பொதுத் துறை பங்குகளை தனியாருக்கு விற்பது மற்றும் குத்தகைக்கு விடுவது என மத்திய அரசின் கொள்கை முடிவுகளை விளக்கி அதனை எதிர்த்து நமது அமைப்பின் தனித்து இயக்கம் மற்ற இதர வெகுஜன அமைப்புகளுடன் சேர்ந்து இயக்கம் நடத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கி தலைமை உரையாற்றினார்.

அதன்பின் மாநாட்டினை துவக்கிவைத்து தோழர் ஜி.சுகுமாறன், பொதுச் செயலாளர், சி.ஐ.டி.யு. மாநில குழு, ஓய்வூதியர்கள் நிலை பற்றியும், இந்தியாவில் அரசுத்துறை ஓய்வூதியர்களை தேசிய அளவில் ஒரு அமைப்பு தோழர் என்.எல்.சிரிதரன் தலைமையில் இயங்குவதைப்போன்று அனைத்து பொதுத்துறை ஓய்வுதிய அமைப்புகளையும் கொண்ட தேசிய அமைப்பை உருவாக்குவதன் மூலம் மத்திய அரசின் ஓய்வூதிய கொள்கைகளை எதிர்த்து ஒரு வலுவான இயக்கம் நடத்த இயலும். அதற்கு சி.ஐ.டி.யு முன் முயற்சி எடுத்து வருகிறது. இந்தியாவில் எப்போதும் நடந்திராக ஒரு வரலாற்று நிகழ்வாக விவசாய சங்கங்களின் ஒரு வருட காலம் போராட்டம் தொழிற்சங்கங்கள் ஒன்றினைந்து போராடினால் வெற்றி நிச்சயம் என்பது எடுத்துக் காட்டியுள்ளது என்று சிறப்புரையாற்றினார்.

தோழர் கே.ராகவேந்திரன் பொதுச்செயலாளர் அகில இந்திய அஞ்சல் ஆர்.எம்.எஸ். ஓய்வூதியர் அமைப்பு, தமிழ்நாடு அரசுஅனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் பொருளாளர் தோழர். என்.ஜெயச்சந்திரன் அவர்களும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துஓய்வு பெற்றோர் நல அமைப்பின் மாநில பொதுச்செயலாளர். தோழர். கே.கர்சன் அவர்களும் மாநாட்டினை வாழ்த்தி உரையாற்றினர்.

உணவு இடைவேளைக்குப்பிறகு 2.45 மணியளவில் பிரதிநிதிகள் மாநாடு துவங்கியது. கடந்த ஓராண்டு காலத்தில் நமது அமைப்பின் நடவடிக் கைகள், இயக்கங்கள், மத்திய அரசின் நிலைபாடுகள், மின்வாரியம் தனியார் மயம், அரசு, மின்வாரியத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகள், ஸ்தாபனம், மற்றும் எதிர்கால கடமைகள் கொண்ட எழுத்துமூல அறிக்கையினை முன்வைத்து மாநில பொதுச் செயலாளர் தோழர். எஸ். ஜெகதீசன் விளக்கம் அளித்து உரையாற்றினார்.

கடந்த ஓராண்டின் குறிப்பாக 01.04.2020 முதல் 31.03.2021 வரையிலும், 01.04.2021 முதல் 30.06.2021 வரையிலும் உள்ள ஸ்தாபன வரவு - செலவு கணக்குகளை மாநிலப்பொருளாளர். தோழர்.ஆர்.ராமநாதன் அவர்கள் பிரதிநிதிகளின் மாநாட்டில் முன்வைத்து விளக்கவுரை யாற்றினார்.

01.04.2020 முதல் 31.03.2021 வரையிலும், 01.04.2021 முதல் 30.06.2021 வரையிலும் உள்ள ஒளிக்கதிர் வரவு - செலவு கணக்குகளை ஒளிக்கதிர் பொருப்பாளர் தோழர்.எஸ்.கணேசன் அவர்கள் பிரதிநிதிகளின் மாநாட்டில் முன்வைத்து விளக்கவுரை யாற்றினார்.

வரவேற்புரைக் குழுத் தலைவர் தோழர் சு.வெங்கடேசன் மார்க்சிஸ்ட் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கொரோனா காலத்தில் இத்தாலியில் வயதானவர்களை, வேலை செய்ய இயலாதவர்களை கை விடுவது என்கிற ஏசிசம் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு அதுவரை இருந்து வந்த முதியோர்களை காப்பது என்ற மரபு தகர்க்கப்பட்டுள்ளது. மூத்த குடிமக்கள் ரயில் சலுகை கட்டணம் அமல்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறி அதற்கு முழு முயற்சி மேற்கொள்வ தாகவும், வரலாறு படைத்த விவசாயிகள் சங்க போராட்டம் குறித்தும், 5 வருடத்தில் நீதிபதிகளின் ஓய்வூதியம் இரட்டிப்பாக 100 சதவிகிதம் உயர்வதை சுட்டிக்காண்பித்தும், டிஜிட்டல் உலகம் வயது வரம்பு கிடையாது நவீன தொழில்நுட்பம் இயக்கம் நடத்த உதவிகரமாக இருக்கும் என்று மாநாட்டை வாழ்த்தி உரையாற்றினார்.

பொதுச் செயலாளரின் அறிகையையும் மாநாட்டு பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வழங்கினர்.

தோழர் எஸ்.ராஜேந்திரன் மாநில பொதுச் செயலாளர். தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு மாநில மாநாட்டை வாழ்த்தி நிறைவுரையாற்றினார்.

தோழர் ஆர்.ராமநாதன் அவர்கள் நன்றி கூறி மாநாட்டை முடித்து வைத்தார்.

## புதிய நிர்வாகிகள்

தலைவர்
தோழர். **எஸ்.எஸ்.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
தோழர். **எஸ். ஜெகதீசன்**

பொருளாளர்
தோழர். **ஏ.பழனி**

### துணைப்பொதுச்செயலாளர்கள்

**எம்.பாலசுப்பிரமணி.**
**ஆர்.ராமநாதன்.**
**வி.பிச்சைராஜன்.**

### மாநில துணைத்தலைவர்கள்

1. எஸ்.ராஜாமணி.
2. என்.சின்னசாமி.
3. ஜி.பஷீர்.
4. ஆர்.கல்யாணசுந்தரம்.
5. என்.தீரமணி.
6. திருத்துவராஜ்.
7. நேசகுமாரிமல்லிகா.
8. ஆர்.ராஜாமணி.
9. சந்திரசேகர்,
10. அன்னதீபம்.
11. முகவை.கி.பெருமாள்.
12. ஏ.ரங்கன்.
13. ஜெயபாண்டி.
14. கருப்பையா.

### மாநில இணைச்செயலாளர்கள்

1. தோழர் எஸ்.ராஜேந்திரன்.
2. எஸ்.கணேசன்.
3. என்.தங்கப்பன்.
4. கே.ஆர்.முத்துசாமி.
5. வி.மைக்கேல்.
6. என்.செல்வராஜ்.
7. தங்க.அன்பழகன்.
8. எச்.கிருஷ்ணன்.
9. வி.ஜெயராமன்.
10. சண்முகசுந்தரம்.
11. கே.நடராஜன்.
12. எம்.காளியப்பன்.
13. நீதிமாணிக்கம்.
14. வசுமதி.

# பணி ஓய்வு பெறுகின்ற நாளில் பணியாளர்களை தற்காலிக பணி நீக்கம் செய்யக்கூடாது என்ற வாரிய உத்தரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**Secretariat Branch,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002**

Memo.(Per.) No.41093/A18/A181/2021-1 dated 14.12.2021

Sub : TANGEDCO - Avoidance of suspension on the last date of retirement Orders issued by the Government - Copy Communicated.

Ref : 1. G.0.Ms.No.144, P&AR (N) Dept., dated 08.06.2007.
2. Memo.(Per) No. 64909 /A18/A181 / 2007-2 (SB), dated 29.08.2007.
3. G.0.Ms.No.111, HRM (N) Dept., dated 11.10.2021.

In the Government Order first cited, instructions were issued to all the Disciplinary Authorities to avoid placing the Government servants under suspension on the date of their retirement. The said G.O. was adopted in TANGEDCO vide Memo. second cited. Now, the Government in G.O. third cited, have issued orders reiterating the instructions already issued in the G.0. first cited and also issued certain guidelines to be followed in this regard. A copy of the same is communicated to all the Disciplinary Authorities for strict adherence. All the Disciplinary Authorities are hereby instructed to follow the guidelines strictly.

**A. MANIKKANNAN**
**SECRETARY**



தோழர் **ஆர். கணேசன்** முகவர் முதல் நிலை, சிவில் பிரிவு மத்திய அலுவலகம் ஈரோடு மின்பகிர்மான வட்டம் அவர்கள் முகவர் முதல் நிலை பதவி உயர்வு பெற்று தந்த மத்திய அமைப்பை பாராட்டி ஈரோடு கிளைக்கு ரூ. 500/-ம் மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 500/- அளித்தார். வாழ்த்துக்கள்



தோழர் **சி. நல்லசிவம்,** முகவர் முதல் நிலை, ஈங்கூர் பிரிவு மத்திய அலுவலகம் ஈரோடு மின்பகிர்மான வட்டம் அவர்கள் முகவர் முதல் நிலை பதவி உயர்வு பெற்று தந்த மத்திய அமைப்பை பாராட்டி ஈரோடு கிளைக்கு ரூ. 500/-ம் மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 500/- அளித்தார். வாழ்த்துக்கள்

# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


பெறுநர்

நாள்: 27.12.2021

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,
வணக்கம்

பொருள் : நிர்வாகம் - ஊதிய உயர்வு - பகுதிநேர ஊழியர் நிரந்தரம் மற்றும் ஒப்பந்த ஊழியர் அடையாளங்காண்பது - தொடர்பாக

தமிழ்நாடு மின்வாரியத்தில் பல்வேறு பிரச்சனைகளின் மீது தீர்வுகாண தங்களிடம் கோரிக்கை வைத்திருந்தோம். அதனடிப்படையில் பணியாளர்களின் பதவி உயர்வு, விருப்ப மாறுதல், அதே போல முதுநிலை பணித்தொகுதி அலுவலர் பதவி ஆகியவற்றில் தலையிட்டு உத்தரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இருப்பினும், கீழ்க்கண்ட முக்கிய கோரிக்கைகளின் மீது தங்களின் மேலான கவனத்தை ஈர்க்க வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

1. மின்வாரிய ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கியிருக்க வேண்டும். இதற்கான பேச்சுவார்த்தைக்குழு அமைத்தும் இன்று வரை குழு கூடவும் இல்லை. தொழிற்சங்கங்களை அழைத்து பேசவும் இல்லை. போக்குவரத்து துறையில் 01.09.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வுக்கு எதிர்வரும் 29.12.2021 அன்று பேச்சுவார்த்தைக்கு அரசு தொழிற்சங்கங்களை அழைத்துள்ளது. எனவே உடனடியாக மின்வாரியத்தில் பேச்சுவார்த்தையை துவக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. விடுப்பட்ட பகுதிநேர பணியாளர்கள் சுமார் 1042 பேருக்கு நியமனம் உத்திரவு இன்னும் வழங்கப்படவில்லை, ஏறத்தாழ 2 ஆண்டுகளாக தொடர்ந்து பேசி, போராடி தற்போது தான் தங்களது பார்வைக்கு வந்துள்ளதாக அறிகிறோம். எனவே உடனடியாக உத்திரவு வழங்கப்பட வேண்டும்.
3. மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டு 22.02.2018-ல் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தினக்கூலியாக ரூ.380/- வாரியமே வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
4. மின்வாரியத்தில் காலிப்பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பணியாளர்கள் கூடுதல் பணிச்சுமையோடு பணியாற்றி வருகின்றனர்.
5. தளவாடப் பொருட்களை விரைந்து வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
6. புதிய துணை மின் நிலையங்களுக்கும், பிரிவு அலுவலகங்களுக்கும் பதவிகளை அனுமதித்திட வேண்டும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் இக்கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து தொழில் உறவை மேம்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது – இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை – 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |

நாள்: 05.12.2021

பெறுநர்
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
**144, அண்ணாசாலை, சென்னை 600 002**

ஐயா,
வணக்கம்

**பொருள் : நிர்வாகம் – மின்சாரம் – விபத்து விருதுநகர் மின் விநியோக வட்டம் PSC மின்கம்பம் முறிந்து கேங்மேன் திரு.காளிராஜ் மரணம் மற்றும் இரு ஊழியர்கள் விபத்து – தொடர்பாக**

விருதுநகர் மின் பகிர்மான வட்டம், சிவகாசி கோட்டம், செங்கமல நாச்சியார்புரம் பிரிவுக்கு உட்பட்ட விநியோகப்பிரிவில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு, 30 அடி அளவுள்ள PSC கம்பம் நடப்பட்டுள்ளது. 04.12.2021 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் மேற்படி மின்கம்பத்தில் பணியாற்றுவதற்கு கேங்மேன் பணியாளர்கள் திரு.காளிராஜ், திரு. முருகேசன், மற்றும் திரு. முத்தீஸ்வரன் உள்ளிட்ட பணியாளர்கள் பணியாற்ற முற்பட்டனர்.

திரு.காளிராஜ் (வயது 27), திரு. முருகேசன் (வயது 27 ) ஆகியோர் கம்பத்தில் ஏறி பணியாற்றும் பொழுது PSC கம்பம் முறிந்து விட்டது. கம்பம் முறிந்த காரணத்தால் திரு.காளிராஜ் இடுப்பு கயிறு அணிந்திருந்த காரணத்தால் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார். திரு.முருகேசன் திருநெல்வேலி ஹைகிரவுண்டு மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். கீழே இருந்த திரு. முத்தீஸ்வரன் அவர்களுக்கும் விபத்து ஏற்பட்டு சிவகாசி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தானது 30 அடி PSC கம்பத்தில் சரியான முறையில் உருவாக்காதது தான். எங்கள் சங்கம் கடிதம் 19.08.2021 அன்று மரியாதைக்குரிய மின்வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களிடம் காலநிலை பேச்சுவார்த்தையின் போதும், 24.08.2021 அன்று தங்கள் முன்னிலையில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுடன்

நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கோரிக்கை எண் 14-ன் மூலமாக PSC கம்பங்களின் தரம் குறித்து தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழுவின் சார்பாக தெரிவித்திருந்தோம்.

மின்வாரியமே உற்பத்தி செய்த கற்காரை கம்பங்கள் (RCC) கடந்த காலங்களில் தரமானவைகளாக இருந்தது. விபத்துக்களும் குறைந்திருந்தது. கற்காரை கம்பங்கள் உற்பத்தி செய்யும் இடங்களை எல்லாம் மூடிவிட்டு தற்போது வெளிமாநிலத்திலிருந்து வாங்கும் PSC கம்பங்கள் சரியான வலுவில்லாத காரணத்தால் காற்றடித்தாலே கம்பத்தில் பணியாளர்கள் வேலை செய்யும் பொழுது பளுதாங்காமல் கீழே விழுவது தொடர்ச்சியாக நடந்து வருகிறது. விலை மதிப்பற்ற மின்வாரிய பணியாளர்களின் உயிர் பறிபோகிறது.

எனவே, முக்கியமான இந்த கோரிக்கையின் மீது தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து நமது கம்பம் உற்பத்தி செய்யும் யார்டுகளில் நமது சிவில் பிரிவு மூலம் உற்பத்தி செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், இறந்த திரு.காளிராஜ் கேங்மேன் அவர்களின் குடும்பத்திற்காக ரூ.25 லட்சம் நிவாரணம் வழங்கப்படுவதோடு, அவரது குடும்பத்தில் ஒருவருக்கு கருணை அடிப்படையில் வாரிசு வேலை வழங்கிட வேண்டும். அதே போல மருத்துவ சிகிச்சையில் இருக்கும் திரு.முருகேசன், திரு. முத்தீஸ்வரன் ஆகியோருக்கு உயர்தர சிகிச்சை வாரிய செலவில் அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

---



வாழ்த்துகிறோம்
தோழர் **ரெங்கராஜ்,** ஆர்.எஸ். குரும்பலூர் பிரிவு, பெரம்பலூர் வட்டம் அவர்கள் வருவாய் மேற்பார்வையாளராக பணியேற்பு செய்ததை முன்னிட்டு மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 500/- அளித்தார்.

வாழ்த்துகிறோம்
தோழர் **சி.பி. வீரமுத்து,**
ஆர்.எஸ். வேப்பூர் பிரிவு பெரம்பலூர் வட்டம் அவர்கள் வருவாய் மேற்பார்வையாளராக பணியேற்பு செய்ததை முன்னிட்டு ரூ. 500/- அளித்தார்.
வாழ்த்துக்கள்

# கேங்மேன் பணியாளர்களை மருத்துவ காப்பீடு திட்டத்தில் இணைப்பது சம்மந்தமான வாரிய உத்தரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**Secretariat Branch,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002**

**Memorandum (Per) No.29595/A17/A171/2021-1. dated. 18.12.2021**

Sub : TANGEDCO - New Health Insurance Scheme, 202l-Eligibility of Gangman (Trainees) appointed on consolidated pay for a period of two years- coverage under New Health Insurance Scheme, 202l-Orders issued.

Ref :
1. G.O. Ms.No. 160 Finance (Salaries) Department, dt 29.06.2021
2. (Per) CMD TANGEDCO Proceedings No.162 (SB) dt,17.07.2021
3. Secretariat Branch D.O. Letter No. 29595/A17/ A171 /2021-2, dt.1810.2021
4. Government Letter No, 1783/FS/T/FS/ Fin (HI)/12021, Fin.(H.I-l) Dept., dated, 19.11.2021

In the Government Order first cited, orders have been issued for implementation of the New Health Insurance Scheme, 2021 to provide Health Care Assistance to the Employees of Government Departments, Public Sector undertakings, Statutory Boards, Local Bodies, State Government Universities, willing State Government Organisations/Institutions and their eligible Family Members with provision to avail assistance upto the limit of Rupees Five Lakh in a block of four years commencing from 01,07.202t to 30.06.2025.

2. Based on the above orders of Government of Tamil Nadu, the New Health Insurance Scheme 2021 was implemented in this Corporation to provide Health Care Assistance to the employees of TANGEDCO/TANTRANS CO & TNEB Ltd., and their eligible family members vide Proceedings second cited,

3. In the Government Letter fourth cited it is clarified that Gangman (Trainees) appointed on.consolidated pay in TANGEDCO for two years period and subsequently being brought under regular time scale of pay after completion of two years shall be made eligible for coverage under New Health Insurance Scheme, 2021.

4. In continuation of the orders issued in the reference second cited, it is hereby ordered as follows

(i) The enrolment of the Gangman (Trainees) under the New Health Insurance Scheme, 2021 shall be compulsory. The monthly subscription per month under the New

Health Insurance Scheme, 2021 shall be Rs, 300/- (Rs.295/- per month subscription for NHIS plus Rs.5/- per month contribution for corpus fund) and the recovery shall commence from the salary for the month of December 2021 onwards. The Gangman (Trainees) and their eligible family members are covered under New Health Insurance Scheme, 2021.

ii) The existing terms and conditions as ordered in the reference second cited, shall be followed.

5. The pay drawing officers are requested to distribute the enclosed Annexure (as prescribed in the G.O. Ms. No. 160 Finance (Salaries) Department, dated 29.06.2021 Annexure-Vl) to the Gangman (Trainees) and to furnish the latest detalls of himself/ herself and their eligible family members along with the recent passport size photographs in the prescribed form.

6. The pay drawing officers are requested to collect the filled in the Annexure as mentioned above from the Gangman (Trainees) under their control and to verify, countersign and hand it over to the MDindia Health Insurance (TPA) Pvt. Ltd., Guna Complex, # 443, 445, Anna Salai, Teynampet, Chennai 600 018 under intimatlon to this office.

7. The receipt of the Memo (Per.) shall be acknowledged.

**RAJESH LAKHONI**
**CHAIRMAN - CUM - MANAGING DIRECTOR**

---



## வருந்துகிறோம்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மகத்தான தலைவரும் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் விவசாய சங்கத்தை கட்டியவருமான தோழர் பி.எஸ். தனுஷ்கோடி அவர்களின் துணைவியார் மனோன்மணி அவர்கள் 25.12.2021 அன்று காலமானார் அவருக்கு வயது 87 தோழர் பி.எஸ்.டி அவர்கள் மக்கள் மத்தியில் பணியாற்றுவதற்கு பேருதவியாக இருந்தவர் தோழர் மனோன்மணி.

வர்க்க போர் கொழுந்துவிட்டு எரிந்த காலத்தில் தலைவர்களை பாதுகாத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது

# இரண்டாயிரத்திலிருந்து 2021 வரை

## 20 ஆண்டுகள் நீதிமன்ற போராட்டம்!

## சாதனை படைத்த மத்திய சென்னை கிளை!

2000-ம் ஆண்டு எம்.ஆர்.டி. கோட்டத்தில் நுண்கருவி கம்மியர் (Instrument Mechanic )காலிபணி இடங்களை நிரப்புவதற்காக வாரிய ஆணை எண் 28- நாள் 23.08.1999 மூலம் மத்திய சென்னை மின் திட்ட நிர்வாகம் நிரப்பிட முடிவு செய்தது. அந்த வாரிய உத்தரவில் Wireman மற்றும் எலெக்ட்ரிஷியன் படித்தவர்கள் 6 ஆண்டுகள் பணி அனுபவம் இருந்தால் அப்பகுதி ஊழியர்களுக்கு 6 மாதங்கள் பயிற்சி அளித்து Instrument Mechanic பதவி அளித்திட வேண்டும். அல்லது Instrument Mechanic Trade படித்தவர்களை பணிக்கு உள்முகத் தேர்வின் மூலம் நியமித்திட வேண்டும். வாரிய உத்தரவை அப்போதைய மின் வட்ட நிர்வாகம் அப்பட்டமாக மீறியது. அதற்கு மத்திய சென்னை கிளை கடுமையான ஆட்சேபனையை தெரிவித்தது.

23.09.2000 சனிக்கிழமை மாலை தி.நகர் கோட்டம் முருகன் திருமண மண்டபத்தில் மத்திய சென்னை திட்ட மாநாடு நடந்து கொண்டிருந்த வேளையில் திட்ட நிர்வாகம் தனக்கு வேண்டப்பட்ட 14 நபர்களுக்கு உள்முக தேர்வு மூலம் Instrument Mechanic பதவி உயர்வை வழங்கியது. இரவு 7.30 மணிக்கு பிறப்பிக்கப் பட்ட உத்தரவை பெற்றுக்கொண்டு அன்றைய இரவே 8.30 மணிக்கு அனைவரும் பணியில் இணைந்தனர். மேற்கண்ட பதவி உயர்வு மின்வாரிய உத்தரவு எண் 28-க்கு எதிரானது என்பதோடு, கிளைச்சங்கம் தனது ஆட்சே பனையை தெரிவித்தது என்பது மட்டுமல்ல, ஊழியர்களை ஒன்று திரட்டி போடப்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. அதோடு மட்டுமின்றி வாரிய தலைவர், விழிப்புபணி அலுவலர் (Vigilence) தலைமை பொறியாளர்/பணியமைப்பு ஆகியோருக்கும் ஆட்சேபனை கடிதம் மற்றும் புகார் அளித்தது.

அதோடு நிற்காமல் நீதிமன்றத்தை நாடி நீதிபெற வேண்டுமென்று கிளைச்சங்கம் முடிவு செய்து தோழர் எம்.தயாளன் மற்றும் 8 நபர்கள் உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தனர். வழக்கு எண் WP No. 12861/ of 2001 வழக்கை அனுமதித்த உயர்நீதிமன்றம் வாரியத்திற்கு 8 வார கால நோட்டீஸ் அனுப்பியது. இந்த வழக்கு என்பது 13.10.2010 அன்று எம். தயாளன் மற்றும் 8 நபர்களுக்கு சாதகமாக சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தீர்ப்பின் மீது நிர்வாகம் மேல்முறையீடு செய்தது. மேல்முறையீட்டு மனுவின் மீதான இறுதி தீர்ப்பு 2016-ம் ஆண்டு மீண்டும் எம். தயாளன் மற்றும் 8 நபர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. மீண்டும் நிர்வாகம் இரண்டு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பை ஏற்காமல் காலம் தாழ்த்தி வந்தது. இதனை அடுத்து எம்.தயாளன் மற்றும் 8 நபர்கள் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தொடர்ந்தனர். இறுதியில் மத்திய சென்னை திட்ட நிர்வாகம் எம். தயாளன் மற்றும் 8 நபர்களுக்கு 2000-ம் ஆண்டு மறுக்கப்பட்ட நீதியை வழங்க ஒப்புக்கொண்டது. அதனடிப் படையில் டிசம்பர் 2021 அன்று எம்.தயாளன் மற்றும் 8 நபர்களுக்கு அவர்களை விட இளையவர் களாக உள்ளவர்களுக்கு முன்னதாக வைத்து முதன்மை பட்டியல் திருத்தம் செய்யப்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக 20 ஆண்டுகளுக்கு பிறகு நீதிமன்றத்தில் வழக்கில் வெற்றி பெற்றது மட்டுமல்ல, நிலுவை தொகையும் ஜனவரி 2022-ல் பெற உள்ளனர் என்பதை மத்திய சென்னை கிளை நிர்வாகிகள் மாநில மையத்தோடு பகிர்ந்து கொண்டனர்.

இதன் மூலம் பதவி உயர்வு முறைகேட்டில் இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து நீதிமன்றத்தில் இருபதாண்டுகள் போராடி சாதனை படைத்துள்ளது மத்திய சென்னை கிளை.

**- எம்.தயாளன்,**
மாநில செயலாளர்

## மின்வாரிய பணியில் உள்முகம் / நேரடி தேர்வின் மூலம் நியமணம் செய்யப்படுபவர்களுக்கு விருப்ப மாறுதல் தொடர்பான வாரிய உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD.**
**(ABSTRACT)**

TANGEDCO – Appointment of Candidates/Employees to any posts in TANGEDCO/TANTRANSCO by Direct Recruitment/ Internal Selection - Orders and certain instructions issued regarding Request Transfer – Modified Orders - Issued.

---

(Administrative Branch)

(Per.) (CMD) TANGEDCO Proceedings No.72

Dated 23.11.2021
Karthigai 7 Pilava Aandu,
Thiruvalluvar Aandu – 2052.

Read :

1. (Per.) (CMD) TANGEDCO Proceedings No.7, (Adm. Br.) Dated:08.03.2019.
2. Note Approval of the CMD/TANGEDCO dated:15.11.2021.

*****

In the TANGEDCO Proceedings No.7 (Adm. Br.) dated:08.03.2019, orders have been issued that the candidates appointed by direct recruitment/internal selection to any post, until completion of five years, shall not be eligible to make any application requesting transfer to any other circle/office under the control of any other appointing authority and, until completion of three years, shall not be eligible to make such application within the circle/office under the control of the same appointing authority.

2) On examination of the various demands put forth by the Unions requesting to modify the time frame, considering the welfare of the employees and also the welfare of the public and consumer satisfaction and further in order to have effective maintenance and proper administration, it has been decided to modify the (Per.) (CMD) TANGEDCO Proceedings No.7, (Adm. Br.) Dated:08.03.2019 as detailed hereunder:-

> "Notwithstanding anything contained in any orders/instructions/ guidelines in force relating to request transfer of Officers/Workmen of the TANGEDCO/TANTRANSCO, for effective maintenance, improving of administration and to ensure utmost consumer satisfaction, that the candidates appointed by direct recruitment will be eligible for request transfer within the circle after completion of one year of service and after completion of two years for request transfer beyond the circle from the appointed station. The employees appointed to any post in TANGEDCO/ TANTRANSCO by Internal Selection are eligible to apply for request transfer within and beyond the circle after completion of one year of service in the appointed station."

This order shall come into force with immediate effect.

(BY ORDER OF THE CHAIRMAN – CUM – MANAGING DIRECTOR/TANGEDCO)

R.KRISHNAMOORTHY
CHIEF ENGINEER/PERSONNEL

# மாநில அரசுக்கு சொந்தமான டிஸ்காம் (விநியோக கம்பெனி)களுக்கு எதிராக திவால் நடவடிக்கை தொடங்கலாம்

## ஒன்றிய பி.ஜே.பி அரசின் மின்துறை அமைச்சகம் வாக்குமூலம்

சென்னை உயர்நீதிமன்றத்தில் சவுத் இந்தியா கார்ப்பரேசன் பிரைவேட் லிமிடெட் தொடங்கியுள்ள Corporate Insolvency Resolution Process (CIRP) நடவடிக்கைகளுக்கு எதிராக TANGEDCO தொடுத்த வழக்கு தொடர்பாக விளக்கம் அளித்துள்ள ஒன்றிய அரசு, கடனாளிகள், அரசுக்கு சொந்தமான மின்சார விநியோக மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கு எதிராக திவால் நடவடிக்கை தொடங்கலாம் என்றும், TANGEDCO போன்ற அரசுக்கு சொந்ததமான மின்சார விநியோகம் மற்றும் உற்பத்தி நிறுவனத்தை பொறுத்த வரை, இது நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 2(45)-ன் கீழ் வரையறுக்கப்பட்ட ஒரு அரசு நிறுவனம் என்பதும், திவாலா நிலை குறியீட்டின் ( IBC ) கீழ்வரும் என்பதும் தெளிவாகிறது எனவும், அரசாங்க செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கான சட்டத்தின் மூலம் TANGEDCO அரசு அமைப்பாக வகைப்படுத்த முடியாது என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

IBC என்ற மசோதா சட்டமாக்கப்பட்டுள்ளது. Insolvency and Bankrupatcy code என்பதன் சுருக்கம் தான் IBC

தனிநபர் முதல் பெரிய நிறுவனம் வரை ஒரு கட்டத்தில் வாராக்கடன் அல்லது செயல்பட சொத்துக்கடன் மூலம் வங்கி மற்றும் மக்கள் பணத்தை திவாலாக்கி வருகின்றனர். உதாரணமாக தற்போது கிங்பிஷர் நிறுனத்தின் தலைவர் விஜய் மல்லையாவை எடுத்துக்கொள்ளலாம்.

இத்தகைய சூழ்நிலையில் தான் உரிய நபர் நிறுவனத்திடமிருந்து வங்கிகள் இழந்த பணத்தை திரும்பபெறும் சட்ட விதிமுறைகளை தான் IBC என அழைக்கப்படுகிறது.

இதில் கம்பெனி சட்டத்தின் பதிவு செய்யப்பட்ட காரணத்தால் மின்வாரியம் அரசு துறையிலிருந்து கம்பெனிக்கு மாறிவிட்டது. மாநில மின்சார வாரியங்கள் குறிப்பாக விநியோகம் கம்பெனிகள் நஷ்டத்தில் இல்லை. தனியாரிடம் அதிக விலைக்கு மின்சார கொள்முதல், மின் உற்பத்தி திட்டங்களை உரிய காலத்தில் அதாவது நிர்ணயம் செய்த காலத்தில் உற்பத்தியை துவங்காமல் இருப்பது, முறைகேடுகள், அரசின் இலவசங்களுக்கான மானியம் உரிய காலத்தில் DISCOM களுக்கு வழங்காதது போன்ற காரணங்களால் மட்டுமே நஷ்டத்தை சந்திக்கிற்து.

இந்த நஷ்டத்தை காரணம் காட்டி தனியாரிடம் கொண்டு செல்வதற்கு மின்சார சட்டதிருத்த மசோதாவை அமலாக்காமல், பின்வாசல் வழியாக, தனியாரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு தான்! திவால் சட்டத்தில் TANGEDCO வை இடம் பெற செய்துள்ளது. எப்படி Air India 64,000 கோடி கடன் உள்ள நிலையில் TATA விடம் வெறும் ரூ. 18,000 கோடிக்கு ஒப்படைத்து கடனை நேர் செய்தார்களோ அது போலபோல தான்! நாளை மாநில DISCOM களை இதே போல செய்ய மறைமுக ஏற்பாடுதான்

**எனவே விழித்தெழுவோம்! மின்துறையை பாதுகாப்போம்!**



# ஏமாற்றும் வித்தை

ஒரு ஊர்ல நிறைய குரங்குங்க வாழ்ந்து வந்துச்சாம். ஒரு நாள், ஒரு வியாபாரி அந்த ஊருக்கு குரங்குகள வாங்க வந்தானாம். ஒரு குரங்க 100 ரூபாய்க்கு வாங்குறதா அறிவிச்சனாம். அந்த ஊர் ஜனங்க எல்லாம் அவன பைத்தியம்னு நினைச்சாங்களாம். யாராச்சாம் மரத்துக்கு மரம் தாவிட்டு இருக்கிற குரங்க காசு கொடுத்து வாங்கிவாங்களாம்னு யோசிச்சாங்களாம். இருந்தாலும் கொஞ்ச ஆளுங்க, குரங்கள புடிச்சு வியாபாரிக்கிட்ட கொடுத்து , அவன் கொடுக்குறதா சொன்ன பணத்தை வாங்கிட்டாங்களாம். இந்த சேதி காட்டு தீ மாதிரி பரவ, நிறைய குரங்கு புடிக்கிற வேலையில இறங்குனாங்களாம். கொஞ்ச நாள் கழிச்சு, அந்த வியாபாரி ஒரு குரங்குக்கு 200 ரூபாய் தரதா சொன்னானாம்.

அது வரை சோம்பேறித்தனமா வீட்டுலயே இருந்தவங்களும் உடனே குரங்கு புடிக்க ஆரம்பிச்சிட்டாங்களாம். பாக்கி இருக்கிற குரங்குகள எல்லாம் 200 ரூபாய்க்கு ஜனங்க வித்ததும், இனிமே வாங்குற குரங்குக்கு 500 ரூபாய் தரேன்னு சொன்னானாம் வியாபாரி. ஜனங்களுக்கு தூக்கம் எல்லாம் போச்சு ! ஊருல மிஞ்சி இருக்குற அஞ்சாறு குரங்குகளையும் புடிச்சி வித்து, ஒன்னுக்கு 500 ரூபாய் வாங்கினாங்களாம்.

வியாபாரி அடுத்து என்ன அறிவிப்பு விடப்போறான்னு மக்கள் ஆர்வமா காத்திருந்தாங்க. ஒரு வாரம் தான் ஊருக்கு போறதாவும், திரும்பி வந்ததும் ஒரு குரங்க 1000 ரூபாய்க்கு வாங்கிக்கிறதாகவும் சொன்னான் வியாபாரி. தன் வேலைக்காரன கூண்டில இருக்கிற குரங்குகள எல்லாம் பாத்து பராமறிக்க சொல்லிட்டு, தன்னோடு ஊருக்கு போனானாம் வியாபாரி. பிடிச்சு வித்து 1000 ரூபாய் வாங்குறத்துக்கு ஒரு குரங்குக்கூட எஞ்சி இல்லையேன்னு மக்களுக்கு கவலை.

அத பார்த்த வியாபாரியோட வேலைக்காரன், ஜனங்களுக்கு ஒரு குரங்க 700 ரூபாய்க்கு விக்கிறதா சொன்னானாம். காட்டு தீ மாதிரி செய்தி பரவிச்சு. வியாபாரி 1000 ரூபாய்க்கு குரங்கு வாங்கினா, எப்படியும் தங்களுக்கு 300 ரூபாய் லாபம் கிடைக்கும்னு யோசிச்சாங்க ஊர் ஜனங்க.

அடுத்த நாள் கூண்டில அடைஞ்சு இருக்கிற குரங்குகள வாங்க பெரிய வரிசை காத்திருந்துச்சு.
ஒரு குரங்க 700 ரூபாய்க்கு வியாபாரியோட வேலைக்காரன் வித்தான். பணக்காரங்க நிறைய குரங்குகள வாங்க, ஏழைங்க கடனவுடன வாங்கி, கொஞ்சம் குரங்குகள வாங்குனாங்களாம். குரங்குகள எல்லாம் பத்திரமா பாத்துக்கிட்ட ஜனங்க, அந்த வியாபாரி மறுபடியும் எப்போ ஊருக்கு வருவான்னு காத்திருந்தாங்களாம்.

யாருமே வரல! எல்லாரும் அந்த வியாபாரியோட வேலைக்காரனைப் போய் பாத்து விஷயத்தை கேக்க ஓடினாங்க. ஆனா அவன் எப்பவோ ஊரை காலிப்பண்ணி ஓடிப் போயிருந்தான்!

அப்பதான் ஊர் ஜனங்க, ஒன்னுக்கும் பிரயோஜனப்படாத குரங்குகள 700 ரூபாய் கொடுத்து வாங்கி, விக்க முடியாத நிலைமையில இருக்கோம்னு உணந்தாங்க. இந்த வியாபாரத்துக்கு பேருதான் ‘ பங்குச் சந்தை ’ இந்த குரங்கு வியாபாரத்தில சொற்ப ஆட்கள் தான் பணக்காரங்க ஆக முடியும். பெரும்பாலான ஆட்களுக்கு குடிதான் மூழ்கிப்போகும்.



மத்திய அமைப்பின்

மாநில செயலாளர்

## தோழர் **எம்.தனலட்சுமி**

மதிப்பீட்டு அலுவலர் அவர்கள்

**சமூகப்பணியாற்ற**

**மின்வாரிய பணியில் இருந்து**

**விருப்ப ஓய்வு**

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயலாளரும், உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு கன்வீனரும், சிஐடியுவின் மாநில செயலாளரும்,இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய உபதலைவரும் தோழர் எம்.தனலட்சுமி அவர்கள் சமூகப்பணியாற்ற மின்வாரிய பணியிலிருந்து 01.01.2022 முதல் விருப்ப ஓய்வு பெற்றுள்ளார். அவரது விருப்பப்பணி ஓய்வு பிரிவு உபச்சார விழா 03.01.2022 அன்று சென்னையில் நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் மத்திய அமைப்பின் தலைவர் தோழர் தி.ஜெயசங்கர், பொதுச்செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன், பொருளாளர் தோழர் எம். வெங்கடேசன், துணைப்பொதுச்செயலாளர்கள் தோழர்கள் கே.ரவிச்சந்திரன், கே. அருள்செல்வன் மாநில நிர்வாகிகள் தோழர்கள் ஆர்.ரவிக்குமார், ஏ.முருகானந்தம், எம்.தயாளன், மற்றும் எம். சாலட், விஜயலட்சுமி, கிளைச்செயலாளர்கள் தோழர்கள் எஸ்.கண்ணன் - மத்திய சென்னை, எஸ். தசரதன் - மேற்கு சென்னை, ஜி.சத்தியமூர்த்தி - வடசென்னை, டி. அன்பழகன் - சென்னை தெற்கு, எம். முத்து - ஜி.ஜி.சி சென்னை, உள்ளிட்ட தோழர்களோடு கிளைகளின் நிர்வாகிகளும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

எம்ப்ளாயீஸ் பெடரேசன் சார்பாக தோழர் ஏ. சேக்கிழார், தொமுசவின் சார்பாக தோழர் பாக்கியநாதன், தமிழ்மாநிலக்குழு சிஐடிவின் பொருளாளர் தோழர் மாலதிசிட்டிபாபு, மத்திய அமைப்பின் முன்னாள் தலைவர் தோழர் எஸ்.எஸ்.சுப்பிரமணியன் மற்றும் மின்வாரிய அதிகாரிகள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சிஐடியூவின் உதவி பொதுச்செயலாளர் தோழர் கே. திருச்செல்வன், மாநில செயலாளர் தோழர் கோபிகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தோழர் எம்.தனலட்சுமி அவர்கள் சமூகப்பணியாற்ற வந்தமைக்கு மத்திய அமைப்பு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.



## செங்கல்பட்டு மின்வட்டக் கிளையின் 16வது ஆண்டு பேரவை

2.1.2022 அன்று செங்கல்பட்டுக் கிளையின் ஆண்டு பேரவை தோழர் வி. தேவக்குமார் தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் வி. செல்லப்பன் சங்கத்தின் கொடியை ஏற்றி வைத்தார். மறைமலை நகர் கோட்ட செயலாளர் எ. சிவக்குமார் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். அச்சிறுப்பாக்கம் கோட்ட செயலாளர் ஜி. தீனதயாளன் வரவேற்றார். சிஐடியு மாவட்ட செயலாளர் க. பகத்சிங்தாஸ் ஆண்டு பேரவையை துவக்கி வைத்து பேசினார்.

கிளையின் செயலாளர் என். பால்ராஜ் வேலை அறிக்கையையும், பொருளாளர் பி. பன்னீர்செல்வம் அவர்கள் வரவு செலவு அறிக்கையையும் முன்வைத்தனர். பேரவையை வாழ்த்தி தென்சென்னை மண்டலச் செயலாளர் எ. முருகானந்தன், மாநில செயலாளர் டி. ஸ்ரீதர், தென்சென்னை திட்டச் செயலாளர் டி. அன்பழகன், உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு நிர்வாகி எம். கலைச் செல்வி, பொறியாளர் அமைப்பு திட்ட செயலாளர் எம். மயில்வாகனன், ஓய்வு பெற்றோர் நல அமைப்பு செயலாளர் சி. வேம்பு ஆகியோர் பேசினர்.

மத்திய அமைப்பின் பொருளாளர் எம். வெங்கடேசன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மாநில பொதுச் செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் நிறைவுரை ஆற்றினார்.

புதிய நிர்வாகியாக கிளைத் தலைவராக என். பால்ராஜ், கிளைச் செயலாளர் வி. தேவக்குமார், பொருளாளர் ஜி. தீனதயாளன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.



### வாழ்த்துகிறோம்

அச்சிறுப்பாக்கம் கோட்டச் செயலாளர் கோ. தீனதயாளன் அவர்களின் மகள் டி. குணசுந்தரி மணமகன் எஸ். கோபி அவர்களின் திருமண வரவேற்பு 25.11.2021 அன்று திருக்கோவிலூரில் நடைபெற்றது. அன்று கிளைச் செயலாளர் தோழர் என். பால்ராஜ், தலைவர் தேவக்குமார், பொருளாளர் பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். அப்போது அயனாவரம் நிர்மல் பள்ளிக்கு நன்கொடையாக ரூ. 5000/- தீனதயாளன் அவர்களால் வழங்கப்பட்டது.

# டிசம்பர் 10-ல்







# 10 நிமிடம் போராட்டம் மகத்தான வெற்றி



ஒன்றிய அரசு பெட்ரோல் பொருட்களின் விலையை உயர்த்தி வருகிறது. சாமான்ய மக்கள் கடுமையாக பாதிக்கப்படும் சூழலும் உருவானது. கேஸ் விலை உயர்வால் இல்லங்களில் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் விலையை நிர்ணயம் செய்ய அனுமதி கொடுத்ததின் விளைவாக லாபத்தை மட்டுமே எதிர்பார்த்து அடித்தட்டு மக்கள் மீது சுமைகளை சுமத்தினார்கள்.

ஒன்றிய பிஜேபி அரசின் இந்த நடவடிக்கையை கண்டித்து டிசம்பர் 10-ல் நண்பகல் 12 மணி முதல் 12.10 வரை வாகனத்தை நிறுத்தி போராட்டம் நடத்துவதென சிஐடியு முடிவின் அடிப்படையில் மின் ஊழியர் மத்திய அமைப்பு போராட்டக்குழுவிற்கு 5லட்சம் துண்டறிக்கைகளை அச்சிட்டு மாவட்டங்களுக்கு கொடுத்தது. இந்த போராட்டம் நடந்த அன்று மின் ஊழியர்கள் பெரும்பான்மை இடங்களில் கலந்து கொண்டனர்.

நமது எதிர்ப்பை பதிவு செய்த வித்தியாசமான போராட்டம் மக்களை கவர்ந்த போராட்டம். பேராட்ட வடிவங்களை மாற்றுவோம். மக்களிடம் நெருங்குவோம்.


மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின்
8வது மாநில மாநாடு
மதுரை – 18,19, டிசம்பர் 2021
TNEPWO
உரிமை

Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 10.01.2022

# தமிழ்நாடு பவர் இன்ஜினியர்ஸ் ஆர்கனைசேஷன்
## 6வது மாநில மாநாடு




Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian